உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உஉ.] ருதிரோத்காரி௵ மார்கழி௴ [பகுதி உ.

Vol. XXII. December-January-1923-24. No. 2.

தமிழ்வளர்ச்சி.*

சில வருடங்களாகத் தமிழ்நாட்டிற் பலவிடங்களில், தமிழ்ச்சங்கங்கள் நிறுவப்பெற்று விளங்கிவருகின்றன. இந்தநிகழ்ச்சி தமிழர்க்கும் தமிழ்நண்பர்க்கும் கலப்பிலா மனக்களிப்பை உண்டுபண்ணும். தொன்றுதொட்டுச் சொற்சுவை, பொருட்சுவை, கவித்திறன், கற்பனைநயம், பத்திரசம் முதலிய பல்வேறுவகையான வனப்புடையதாய், நந்நாட்டாரை மழலைப்பருவமுதல் மனக்களிப்பூட்டி வளர்த்துவந்த தாய்மொழியாகிய தமிழ், சில ஆண்டுகட்குமுன் தமிழ்மக்களிடையில் ஆதரவிழந்து, சீர்குன்றித் தளர்ச்சியுற்று, உயிர்ப்பிச்சை இரப்பதுபோல் தயங்கிநின்ற பரிதாபநிலையை நாமறிவோமன்றோ? ஆனால், சமீபகாலத்தில் இந்தியாவெங்கும் கிளம்பின தேசீயவபிமானவெழுச்சியின் பயனாய்த் தேசீய பாஷாபிமானமும் நந்தமிழ்நாட்டில் ஏற்பட்டது. அதனால், தமிழின சீர் சிதைய நம்மவர் இனிப் பொறுக்காரெனத் துணிவுறக் கூறலாம். தமிழின் துர்த்தசை நீங்கிற்றென்போமாகினும், அப்பாஷைக்குரிய உயர்நிலைமையையும் இயற்றிறமையையும் அது பெற்று நாட்டுக்கு நலம்விளைக்கத் தமிழ்மக்கள் இன்னு மெத்துணையோ பாடுபட வேண்டும். எல்லா நற்காரியங்களையும் கைகூடுவிப்பது இடைவிடாத முயற்சியேயாம்.

*இது, சாத்தூர்த் தமிழ்ச்சங்கத்தின் ஒன்பதாவது வருடக்கொண்டாட்டத்தில் வாசிப்பதற்காக எழுதப்பட்ட அக்கிராசனருபந்நியாசம்.

"இசையா தெனினு மியற்றியோ ராற்று
லசையா து நிற்பதா மாண்மை"

என்றது நாலடியார். அதனால், தமிழ்மொழிவளர்ச்சிக்கு வேண்டிய வழிகளையாய்ந்து, அம்மொழியின் உதவியாற் சமுதாயம் அடையக்கூடிய நலங்களைப் பெருகச்செய்து, தமிழ்நாட்டுமாண்பு ஓங்குமாறு தமிழ்ச்சங்கங்கள் ஊக்கத்தோடு உழைக்குங் கடப்பாடுடையன. தமிழ்வளர்ச்சியால் சமுதாயம்பெறும் நலம் என்னையென்று வினவுவார் இக்காலத்தில் மிகச்சிலரேயாவர் என்று நினைக்கிறேன். எந்த மக்கட்டொகுதியாரும் அவர்க்குரிய செந்நெறியையும், தனிநடையையும் இயற்றேர்ச்சியையும் முற்றுமிழக்க அவரது சொந்தபாஷையைக் கைவிட்டுப் பிறபாஷாதிக்கத்திற்குட்படலே இணையில்லா மார்க்கமாம். செம்பொருள்களனைத்தையும் எல்லாமொழிகளும் ஒன்றுபோலவே நன்குவிளக்கும் ஆற்றலுடையனவல்ல. லத்தீன் (Latin)பாஷையில் ஆத்மதத்வவிசார நூல்கள் இயற்றல் இலகுவன்றும். தமிழிலும் ஸம்ஸ்கிருதத்திலும் விளக்கப்பெறும் தத்துவசாத்திர நுட்பங்களை ஆங்கிலமொழியில் தெள்ளிதின்விளப்பலரிதாகும். தமிழ்மொழிக்குரிய பொருளிலக்கணமும் திணையிலக்கணமும் வேறெங்கணுங்காணேம். ஒரு தேசத்தார் பௌதிக, மானசிக, ஆத்மிக காரியங்கள் சீர்பெறச்செய்தற்கும், உரியதோர் நாகரிகப் பேறுபெற்றுத் தாமும் ஞானப்பெருக்கடைந்து, அதன்வழியாக உலகத்தின் பொதுநல அபிவிருத்திக்கு உதவிபுரியும் ஆற்றலடைதற்கும், அத்தேசபாஷையே சிறந்தகருவியாகும். ஒரு தேசத்தாரின்பாஷை அவர் ஜீவநாடியென்று கூறலாம். அந்த ஜீவநாடி முற்றுமடங்கி நாட்டின் தனிநலமழிதற்கு அன்னியபாஷையைக் கைப்பற்றி ஒழுகுதல்போன்ற மற்றுபாயமொன்றுமிலது. பிறிதோர்நாட்டாராட்சிக்குக் கீழ்ப்பட்டிருக்கும் நாடுகளில், ஆட்சிபுரிவோர் தங்கள்நாட்டுப் பாஷையை முழுதும் பரவச்செய்ய முயன்றுவருதல் உலகெங்குங் காணக்கிடக்கின்றது. அவராட்சி ஆணிவேரூன்றி அசைவற நிற்கவெண்ணி நாட்டுப்பாஷையைத் தம் பாஷையால் அமர்த்தமுயறல் இயற்கையே. என்னை? தம்பாஷையைவிட்டுப் பிறபாஷை பேசுவோர் அப்பாஷையில் நினைக்கவும் அப்பாஷையோது நடையுடைபாவனை நோக்கங்களைத் தமதெனஏற்றொழுகவுஞ்செய்வார்கள். அதனால் அவர் தம் தனிவாழ்க்கையை இழந்து,

தங்களை யடக்கியாளும் நாட்டாரோடு ஒன்றித்துவிடுவார்கள். போலண்டில் (Poland) ஜர்மானியர் ஜர்மன்பாஷைப் பயிற்சியைக் கட்டாயப்படுத்திவந்ததும், ஆங்கிலவரசாட்சியார் தென்ஆபிரிகாவில் டச் (Dutch) பாஷையையும், கானடா (Canada) வில் பிரஞ்சு (French) பாஷையையும் தவிர்த்ததும இவ்வுத்தேசத்தோடுதான் இருக்கவேண்டும். இந்தியாவில் ஆங்கிலந்தான் வழங்கவேண்டுமென்ற கட்டாயம் ராஜாங்கத்தாரால் ஏற்படுத்தப்படவில்லை. ஆயினும், அது ராஜபாஷையாயிருத்தலானும், உயர்ந்த ஊதியமளிக்கும் பெரியதொழில்கட்கு அப்பாஷாஜ்ஞானம் இன்றியமையாததாயிருத்தலானும், வேறு காரணங்களானும் ஆங்கிலப் பயிற்சி ஆவசியகமாயிற்று. ராஜாங்கத்துறைகளின் பல்வகைத்தொழில்கள் சரியாய் நடத்தற்கேற்றவிதத்திற் பள்ளிக்கூடங்களிலும் உயர்தரக் கல்லூரிகளிலும் படிப்புமுறை ஏற்பட்டது. இது முறைமையே. ஆங்கிலநாகரிகத்திற்கிணையாக வேறொன்றுமில்லையென்று மனதாரநம்பும் ஆங்கிலேயர், அதைப் பரப்புதலாலேயே ஆங்கில ஸாம்ராஜ்யமுழுதும் தக்க மேம்பாடுறுமென்று நினைத்தல் இயல்பன்றோ? அவ்வெண்ணத்திற்கிணங்க நம் புராதன கலையையும், நந்நாட்டுப் பாஷையிலமைந்த நூல்களையும், அவை விளக்கும் அரும்பெரும் போதனைகளையும், அவற்றால் வளர்க்கப்பெற்ற தமிழ்நாகரிகத்தையும் வாளா கூளமெனத் தவிர்த்து, ஆங்கிலபாஷையையும், ஆங்கிலநூல்களையும், ஆங்கிலக்கலையையும் இந்நாட்டில் நிறுவச்செய்து ஆங்கிலநாகரிகம் நாடெங்கும் வியாபிக்க ஆங்கிலேயர் முயலுதல் சுவாபாவிகந்தான். தமிழ்ப்பாஷையும் தமிழரின் பண்டை ஒழுக்கவழக்கங்களும் செவ்வனே போற்றப்படுந் தன்மையனவென்று தமிழர் நினைத்தால், அவை விதேசபாஷாகலைகளின் ஆதிக்கத்திற்குட்பட்டு மாண்டுபோகாமல் தழைத்தோங்கிவாழத் தமிழ்மக்களே தக்கமுயற்சி செய்யவேண்டும். அவர் அவ்வாறு முயற்சிசெய்யாதவரை ஆங்கிலத்துரைத்தனத்தார் தமிழ்மொழியும் அதிலடங்கிய பல்வேறு கலைகளும் நாகரிகவளர்ச்சிக்குப் பயன்படாவென்று நினைப்பதில் தவறென்னை? "தாமே தமக்குச் சுற்றமும் தாமேதமக்கு விதிவகையும்" என்றார் வாதவூரடிகள்.

"நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானுந் தன்னை
நிலைகலக்கிக் கீழிடுவானு—நிலையினு

கெடுப்பதுபோல, கல்லாதார் மனப்பக்குவமில்லாதவராய் இருத்தல்பற்றி விலங்கொடு ஒப்பாராகையாற் சமுதாயத்தின் வளர்ச்சியைக் கெடுத்து நலத்தைக் குறைபடச் செய்வார். அதுபற்றியன்றோ "பிச்சைபுகினும் கற்கைநன்றே" என்றார் முன்னோரும்? அதனால் யாவரும், கல்விப் பொருள் எளிதிற்பெற வழிதேடுதலே நமது முதற்பெருங்கடமை.

தமிழ்மொழிவாயிலாக இக்காலத்திற்கேற்ற கல்விபயிற்ற முடியா தென்று நினைத்தல் பொருத்தமுடையதன்று. தமிழ்மொழி இலக்கணமும் இலக்கியமும் பெரிதிற்பெற்ற செம்மொழியாதலாலும், பேச்சுவழக்கில் நடமாடிவருதலாலும், அதற்குவேண்டும் அகற்சியும் வன்மையும் வருத்தல் சிரமமன்று. 'சேணிற் பறக்கின்ற செந்தமிழ்க் குதிரை முன் திட்டேது தட்டேதுகாண்' என்ற புலவர்க்குத் தமிழின் இயக்கவன்மையையும் இயற்கைவலிமையையும்பற்றிச் சந்தேகம் சற்றும் எழவில்லை. அதுபோல, தமிழ் வளர்ச்சிக்குத் தலையிட்டுழைப்பார்க்கு, அதன் ஆற்றலைப்பற்றிய திடமான நம்பிக்கையிருக்கவேண்டும். சிலர் பசித்தவன் பழங்கணக்குப் பார்ப்பதுபோலத் தமிழின் பண்டைப்பெருமையைப் பேசுவதிலும், அதற்கில்லாத பெருமைகளை உள்ளனபோலக் கற்பித்துப் பேசுவதிலும் காலத்தைப் பழுதுபோக்கி அவர்க்குத் தமிழின்மேலுள்ள அபிமானத்தைக் காட்டுகிறார்கள். இவ்வாறு செய்தலால் தமிழ்மொழியும் தமிழ்நாடும் பெறும் பயன் யாதோ தெரியவில்லை. உள்ள குறைகளை உணர்தலே வளர்ச்சிக்கு முதற்கருவி. அவற்றையுணர்ந்து நீக்கமுயல்வோர்க்கே முன்னேற்றமுண்டாகும். தமிழ்மொழியிற் குறைகளிலவெனச் சிலர் பேதைமை அபிமானத்தின் தூண்டுதலாற் கூறுவர். தமிழிலுள்ள குறைகளை ஒப்புக்கொண்டு, தற்கால ரீதிக்குத்தக்கவிதத்தில் அக்குறைகளை நீக்க முயலவேண்டும். 'பெயர் பொறிக்கும் பேராண்மை இல்லாக்கடை', பெருமை சித்திப்பதெங்ஙனம்?

நாட்டுப்பாஷைமூலமாகக் கல்விகற்பித்தலால் விளையும் நன்மைகள் பலவுள. மாணவர்கள் சொந்தபாஷையிற் கற்றலால், வேற்றுப்பாஷையிற் கற்றுக்கொள்வதிலும் எவ்வளவோ விரைவாகவும் விளக்கமாகவும் விஷயங்களை உணர்வார்கள். ஒவ்வொரு பொருளையும் நாம் நாமத்தாலும் ரூபத்தாலும் அறிந்துகொள்கிறோம். ஒரு தமிழ்க்குழந்தைக்கு

அதன் வீட்டில் ஒரு புஷ்பத்தைக் காண்பித்து, அப்பொருளின் பெயர் "பூ" என்றுசொல்லி விளக்க, அக்குழந்தையின் மனதில், கண்ணிற்குத்தோன்றிய உருவத்திற்கிணையாக, ஓர் படிமையும், செவிமடுத்த ஒலிக்கிணையாக ஓர் படிமையும் பதிகின்றன. இவ்விரண்டு படிமைகட்கும் தொந்திப்பு மனத்திலேற்படுவதால், உருவத்தைக் காணும் வேளைகளில் அதற்குரிய ஒலிப்பிரதிமையும், ஒலியைக்கேட்கும் வேளைகளில் உருவப்பிரதிமையும் குழந்தையின்மனதிற் றோன்றும். பள்ளிக்கூடத்தில் அதே பூதியப்பொருளை flower என்றழைக்கக் கற்பித்தால், குழந்தையின் மனத்தில் அப்பொருளோடு முன் தொந்தித்திருந்த ஒலிப்படிமைக்கு மாறுபாடாக முற்றும் வேற்றுமையுள்ள ஒரு ஒலிப்படிமை ஏற்படும். இவ் விபரீதத்தால் இரண்டு ஒலிப்பிரதிமைகளும் தெளிவுகுன்றி மழுங்கும். அல்லது யாதேனுமொன்றை அக்குழந்தை மறக்க இடையாகும். எவ்வாற்றானும் குழந்தையின்மூளைக்குக் களைப்பு ஏற்படும்; தெளிவின்மையும் உண்டாகும். இந்த ஸ்திதியில் தமிழ் வாலிபரின் பனோபாவங்களையும் ஆங்கிலம்போன்ற வேற்றுமொழிகளில் வெளியிட நேர்ந்தால், தமிழ்ப் பேச்சுவழக்கும் தமிழ் இலக்கணநடையும் ஆங்கிலம்போன்ற பாஷைகளின் பேச்சுவழக்கிற்கும் இலக்கணநடைக்கும் முற்றும் வேறுபட்டிருத்தல்பற்றிக் குழந்தைகட்குண்டாகும் கலக்கமும் மயக்கமும் எவ்வளவினவென்பதை எளிதில் ஊகித்தறியலாம். ஒருதாரணம் கூறுகிறேன். "சுவர்களிற் பல படங்களிருக்கின்றன" என்ற தமிழ்வாசகத்தை ஆங்கிலத்தில் "There are many pictures on the walls," என்றும், பிரஞ்சில் 'Il y a beaucoup de tableaux sur les murs' என்றும் மொழிபெயர்த்தல் வேண்டும். ஆங்கிலவாசகத்தின் அமைப்பையொட்டித் தமிழ்ப்படுத்தினால், "அங்கே இருக்கின்றன பல படங்கள் மேலே அந்தச் சுவர்கள்" என்றெழுதவேண்டும். பிரஞ்சுவாசகத்தின்வழிக்கிணங்க, ஆங்கிலத்தில் 'It there has much of pictures upon those walls' என்றும், தமிழில் 'அது அங்கே உடைத்தாயிருக்கிறது அதிகம் உடைய படங்கள் மேலே அந்தச் சுவர்கள்' என்றும் உரைநடை அமையும். வாசக அமைப்பில் இவ்வளவு மாறுபாடுள்ள வேற்றுமொழிகளில் நம் மக்கள் கல்விபயின்றால் எவ்வளவு காலமும் உழைப்பும் வாளா போகும்! அவ்வாறு வீண்போகும் காலத்தையும் உழைப்பையும் தாய்மொழியில்

கல்விகற்பித்தால் கற்போர்க்கும் ஏனையோர்க்கும் பயன்படத்தக்கவிதத்திற் செலவுசெய்யக்கூடுமென்றோ? காலஞ்சென்ற சுப்பிரமணியபாரதி கடாவியதுபோல, 'களிப்புமிஞ்சி ஒளியினைப் பண்டொருகாலம் நீர் சென்று தேடியதில்லையோ?' அன்று 'ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி யிசைகொண்டு' விளங்கிய தமிழ்மொழியன்றோ இருள் நீக்கி ஒளிபரப்பியது? வேற்றுமொழிவழியாகக்கிடைக்கும் அறிவு தெள்ளறிவென்பதற் கிடமில்லை. ஆங்கிலநாட்டைச்சார்ந்த வேல்சு (Wales) நாட்டில் ஜனங்கள் பேசும் தேசபாஷை வெலஷ் (Welsh) எனப்படும். வீட்டில் வெல்ஷ் பேசவும் பள்ளிக்கூடத்தில் ஆங்கிலம் கற்கவும் செய்துவரும்பிள்ளைகள்விஷயமாய் அவ்வூர் வித்யா இலாகாக்காரர் சமீபத்திற் சில பரீக்ஷைகள் நடத்தினார்கள். அப் பரீக்ஷைகளால் விளங்கியவற்றுள் ஒன்று, வெல்ஷ்பிள்ளைகட்கு அவர் தாய்ப்பாஷையிற் படிப்பேற்பட்டால், ஆங்கிலபாஷையிற் கற்றுக்கொள்வதைவிடச் சீக்கிரமாகவும் தெளிவாகவும் அவர் அறிவுந் தேர்ச்சியும் பெறுவரென்பதாம். இம் முடிவு நம் நாட்டிற் கலவிபயிற்றும்வழி நிச்சயிப்பதிற் கருத்துவைத்துச் சிந்திக்கத்தக்கது. நம் மொழியில் இக்காலத்திற்கேற்ற அறிவு முதிர்ச்சிக்கும் செல்வப்பொலிவிற்கும் வேண்டுவனவாகிய வனஸ்பதிசாஸ்திரம் (Botany), பசுசாத்திரம் (Zoology), சரீரசாத்திரம் (Anatomy), அங்கதந்திரம் (Physiology), பூவர்ணனம் (Geology), வாணிஜ்ய வித்யா (commerce, வித்தசாத்திரம் (Economics), உலோகவித்யா (Mineralogy), ரசாயனசாத்திரம் (Chemistry), பூதசாத்திரம் (Physics) போன்ற பலநூதனக்கலைகளிலும் தக்கநூல்களில்லாதகால், இக்காலமுறையிற் பயன்படுமாறு தமிழிற் கல்விபயிற்றுதல் இயலாதென்று சிலர் நினைக்கலாம். தமிழில் மேலைநாட்டுக் கலைகளை விளக்க நூல்களில்லாதது பெருங்குறையே. ஆனால் இதற்குக்காரணம் நாம் தமிழ்வளர்ச்சியைச் சற்றுங் கவனியாது விட்டதுதான். இப்பொழுதாவது தற்காலக் கல்விமுறைக்கிசைந்த பாடங்களடங்கிய சாத்திரப் புத்தகங்கள் தமிழிலும் சாத்திரவறிவிலும் தேர்ச்சியுடையாரால் எழுதப்பெறவேண்டும். தமிழிற் புத்தகங்கள் வந்தபின்னரே அப்பாஷையிற் கல்விபயிற்றலாமென்போர் நீந்தத்தெரிந்தபின்னரே நீரில் இறங்கவேண்டுமென்பாரை ஒப்பர். தமிழே கல்விகற்பிக்கும் வாயிலாக ஏற்பட்டால், தமிழில் வேண்டிய புத்தகங்களும் புனையப்படுமென்பதிற்

சந்தேகமில்லை. மனத்திட்பத்தோடு வினைக்கண்புகுந்தால் விதியையும் விலக்கலாம்.

"எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்".

என்றார் திருவள்ளுவநாயனார்.

பச்சிமநாட்டுச் சாத்திரங்களைத் தமிழில் எழுதுவோர் சோலி இலகுவன்று. அவர்கள் எழுதப்புகும் கலைகளில் உயர்ந்த தேர்ச்சியுடையராய் இருக்கவேண்டும். அதனுடன் ஏனையோர் அறியும் வண்ணம் எளியநடையில் அவர்கள் எழுதவேண்டும். அவ்வாறு செய்தாலன்றித் தமிழ்நாட்டுப் பொதுஜனங்களின் அறிவு வளராது. தாமே ஆய்ந்து புதிதா யெழுதவேண்டுமென்ற நிபந்தனையில்லை. வேறுபாஷைகளிலுள்ள நல்லபுத்தகங்களைத் தெளிவுறத் தமிழில்மொழிபெயர்த்தலும் ஒருவழி. இவ்விஷயமாய் என்நண்பர் ஸ்ரீமத் K. S. ஸ்ரீநிவாஸ பிள்ளையவர்கள் தாம் எழுதிய 'தமிழ் வரலாறு' என்ற அரியநூலிற் பின்வருமாறு கூறுகிறார்கள். "சாத்திரங்களைத் தமிழில் எழுதுவதனால் அந்நந்தச் சாத்திரங்களுக்குரியபதங்களை (technical terms), தமிழ்ப்படுத்துவது எப்படியென்று யோசிக்கவேண்டும். பிரதிபதம் தமிழில் கிடைப்பதரிது. இப்படித் தங்கள் பாஷைப் பிரதிச்சொற்கள் கிடைப்பது அரிதாயிருந்ததால், ஜப்பானியர் மேல்நாட்டுப்பாஷைப்பதங்களை அப்படியே எடுத்துத் தங்கள் பாஷைச்சொற்களாக வழங்கினர். மேல்நாட்டாரோடு நாம் பழக இப்பதங்கள் ஒன்றாயிருப்பது மிகவும் பயன்படுகிறது. பிரதிபதம் கிடைப்பது அரிதாயிருந்தால் நாமும் ஜப்பானியரைப்போலச் செய்யவேண்டும்." சாத்திரங்களுக்குரிய சங்கேதபதங்கள் ஒருநாட்டாருக்குத் தனிமையாய் உரிமைப்பட்ட குழூஉக்குறியல்ல. அச்சாத்திரங்கள் கற்கும் எல்லாநாடுகளிலுமுள்ள வித்தியார்த்திகளுக்கும் வித்வான்களுக்கும் பொதுப்பட வுரித்தாம் பரிபாஷை என்று கருதவேண்டும். தமிழில் நூதன சாத்திரங்களை விளக்கும் புத்தகங்கள்மாத்திரமன்று, நந்நாட்டுச்சரித்திரமும், புலவர்சரித்திரமும், பெரியோர்சரித்திரமும், இலக்கியவிளக்கநூல்களும் இவைபோன்ற பல்வேறு புத்தகங்களும் அமையப்பெறவேண்டும். வெகுகாலமாகத் தமிழ்ச் செய்யுள்நடையில் சந்தியிலக்கணம் சற்றும் தவறாது எங்கும் பிர

யோகித்து, சொற்களை ஒரே சங்கிலிப்பின்னல்போலக் கோத்து எழுதி வருவது நாம் அறிவோம். வீணான சந்திப்புணர்ச்சியே நம்பாஷையில் சொற்றொடரின் பொருள்விளங்குவதற்குப் பெருந்தடையாக ஏற்பட்டு நிற்கிறது. இக்காலத்தில் வசனநடையில் எழுதுவோரும் சந்தியிலக் கணத்திற் பதங்களைப் புணர்த்தி எழுதிவருகிறார்கள். மனக்கருத்தை வெளிப்பட விளக்குதற்குரிய கருவியாதலே பாஷையின் இலக்கண மாகையால், பொருள்விளங்கத் தடையாயிருக்கும் சந்தியிலக்கணத்தைக் கைவிட்டு, உரைநடையிற் பதங்களைத் தனித்தனியே எழுதமுயன்றால் நாட்டுக்குப் பெரிய நன்மை விளையும். இக்காலத்திற சிலர், செய்யுட் களிலும் சொற்களைச் சந்திபிரித்துத் தனித்தனியே எழுதிவரத் தொடங்கியிருக்கிறார்களாகையால், வசனநடை எழுதுங்காற் சந்தியிலக் கணத்திற் பதங்களைப் புணர்த்தாமல் ஏன் எழுதக்கூடாது. ஆங்கிலத் திற் சந்தியில்லாதிருப்பது யாவருமறிவர். அது அம்மொழிக்கு ஓர் குறை யென்று யாரேனும் நினைப்பாரா? ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸபிள்ளையவர் களும் இக்கருத்தேகொண்டனராவர். இச்சந்தர்ப்பத்தில் அவர்கூறும் வேறுசிலமொழிகளும் நன்கு கவனிக்கற்பாலன: "உரைநடையில் திரி சொற்பிரயோகத்தைத் தவிர்க்கவேண்டும். இயற்சொற்களையே பெரும் பான்மை உபயோகித்தல்வேண்டும். இலக்கணவழூப்புகாமற் காக்க வேண்டும். தமிழ்ச்சொற்கள் இருக்கப் பிறபாஷைச்சொற்களைச்சேர்ப் பது தவறேயாம். தாசில்தார், தாலூகா, ஜில்லா, சப்கோர்ட்டு, முனி சிப்கோர்ட்டு, வக்கீல் முதலிய பல சொற்கள் மகம்மதியர் ஆட்சிக்காலத்தி லும் ஆங்கிலேயராட்சிக்காலத்திலும் தமிழியற்சொற்கள்போல நடை பெற்றுவருகின்றன. தமிழ்மக்கள்யாவரும் அவற்றின்பொருளை அறி வார்கள். அவற்றின்பொருளையுணர்த்தக்கூடிய வேறுபதங்களை அவற் றுக்குப்பிரதியாகச்சொன்னா லறியார். உதாரணம்: ஹைக்கோர்ட்டு என்றால் யாவரும் அறிவர். அதை உயர்தரமன்றம் என்று சிலர் எழுதுகின்றனர். அதைப்படிப்போர் அதன்பொருளையறியாது மயங்கு கின்றதைப் பார்த்திருக்கிறேன். அவைகள் முதலிற் பிறபாஷை மொழிகளாயிருந்தாலும், தமிழியற்சொற்கள்போல வழங்கிவிட்டன, 'கடிசொலில்லை காலத்துப்படினே' எனத் தொல்காப்பியர் சொல்லியபடி இவை தமிழியற்சொல்லேயாம். பிறபாஷைகளிலிருந்து ஒவ்வொரு காலத்தும் பலகாரணங்களால் ஒருபாஷைச் சொற்களைக்கொள்ளுதல்

இயற்கை யென்பர் மொழிநூல்வல்லுநர். தமிழும் பலசொற்களை வேறு மொழிகளிலிருந்து முற்காலத்திற்பெற்று வளர்ந்திருக்கிறது. இது மொழிவளர்ச்சிக்கு ஏற்பட்டவழிகளி லொன்று.

'முயற்சி திருவினையாக்கும்' என்ற தேவர்கூற்று மெய்யேயாயினும், முயற்சியால் நாடிய காரியம் கைகூடப் பொருளுதவி வேண்டும். இது ஏழைநாடாயிற்றே. தமிழ்க்கல்வியைப் பல்லாற்றானும் வளர்க்கப் போதிய பணம் சேர்ப்பதெங்ஙனம்? என்ற கேள்வி உண்டாகலாம். தமிழரின் தொகை இரண்டுகோடியை எட்டுவதால், தமிழின் அபிவிர்த்திக்கென்று அவர்கள் தங்களாலியன்ற தொகையை அவர்கள் ஜன்மத்தில் ஒருதடவையிற்கொடுத்தால், சராசரி ஒருவர்க்கு ஒருரூபாவீதம் கிடைக்காதா வென்று ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸபிள்ளை கேட்கிறார். 200 லக்ஷரூபா சேகரிப்பது பெரிதல்லவென்பது அவர் நம்பிக்கை. அவ்வளவுதொகை கிடைக்குமானால், அதன் வட்டியைக்கொண்டு தமிழைப் பலவிதங்களில் வளர்க்கலாம்; ஐயதற்குச் சிறிதுமிடமில்லை. இச்சூழ்ச்சி நயப்படுமாவென்பதைத் தமிழபிவிர்த்திக்கும் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கும் உண்மையன்போடு உழைப்போர் யாவரும் சிந்திக்கக்கடவர். எவ்விதத்திலாவது பொருளுதவிபெறவேண்டும். 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்ற முதுமொழிப்படி, உள்ள மார்க்கங்களையெல்லாம் நாடிப் பொருளைச் சேர்க்கவேண்டும். பொருளிருந்தால், எடுத்த காரியத்தை அச்சமும் வருத்தமும் இல்லாமல் நன்கு நடத்தலாம்.

> "குன்றேறி யானைப்போர் கண்டற்றாற் றன்கைத்தொன்
> றுண்டாகச் செய்வான் வினை."

ஆங்காங்கு, தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கும் தமிழ்ச்சங்கங்களின் அங்கத்தினர்களும் தமிழபிமானிகளும் தமிழும் தமிழ்நாடும் வளர்ந்து பொலிவும் நலனும்பெற்றோங்க ஒத்தமனத்துடன் உழைப்பாராக அவர்களது நன்னோக்கங்கள் ஈடேறுமாறு திருவருள் சுரக்க,

"ஞானக் கரும்பின் றெளிவைப் பாகை நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச் சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப்பிறப்பறுத்தாண்டுகொண்டகூத்தனைநாத்தழும்பேறவாழ்த்தி"

நித்தம் வணங்குவாம்.

கே. ஜி. சேஷையர்.

ஓர் ஐயுறவு.

இப்பொழுது சிலவருடங்களாக எனது நண்பர் ஸ்ரீமத் விருதைச் சிவஞானயோகிகள்போன்ற சில நற்றமிழறிஞர்கள் திராவிடர் என்ற பதத்தைத் திருவிடர் என வமைத்துப் பேசியு மெழுதியும வருகிறார்கள். அவ்வாறுசெய்துவருவோர் தமிழ்மொழிவல்லுநராகையால்,

"எப்பொரு ளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர்
செப்பின ரப்படிச் செப்புதல் மரபே"

என்ற விதிப்படி, இம்மாற்றம் தமிழ்மரபுமாற்றமாகத் தமிழரேற்றுக் காலக்கிரமத்தில் அதைச செம்மொழியாக வழங்கப்புகுவீர். திருவிடர் என்ற பதம் தமிழரைக் குறிக்கும் பொதுப்பெயராக வழக்கில் ஒப்புக் கொள்ளத்தக்கதா? திராபிடர் என்றால் தமிழ்நாட்டார், தமிழர் எனப் பொருள்படும. சொற்பொருள்நோக்கின், திருவிடர் என்னாகும்? திருவிடர் என்றபதத்தைத் திரு+இடர் அல்லது திரு+விடர் என்று பிரித்து, இருவேறுபொருள் துணிபலாம். திரு எனற மங்கலச்சொல் மேன்மையைபுணர்த்தும. இடர் என்றால் துன்பம். ஓரினத்தார்க்கு உரியபெயர் திரு இடர் என்றால் அவர் பெரும் துன்பம் உருக்கொண்டாற் போலுள்ளவர், அல்லது பெரும்துன்பம் விளைப்பவர் எனறு கருதப்படுவர். இடர் அன்று; விடர் என்போமாயின், 'விடர் முனிபிருப்புத் தூர்த்தர் கமர் வெற்பின்முழை காடைம்பேர்' எனறது சூடாமணி நிகண்டு. விடரின்பொருள் அவையாயின் அவற்றுள் மானிடத்திரளுக்குப் பொருந்துவது 'தூர்த்தர்' மாத்திரந்தான் ஆகவே திருவிடர் என்றபதம் சிறந்த தூர்த்தர் எனப் பொருள்படும். எவ்வாறு பிரித்துப்பொருள்கொள்ளினும், அமையும் பொருள் விபரீதமேயாம். அதனால், திராவிடரை, இப்பொழுது புதிதாய்ப்புனைந்த திருவிடரென்ற பெயரா லழைத்தல் சிறப்பாமோ வென வையுறுகிறேன். 'திராவிடர்' என்றபதம் பிறபாஷைமொழியாயிருந்தாலும், தனித்தமிழ்ச்சொற்கள் போலவே தமிழ்நாட்டில் வெகுகாலமாக நடைபெற்றுவருகின்றது. அதன்பொருளைத் தமிழ்மக்கள்யாவரும் அறிவர். 'கடிசொ லில்லை காலத்துப் படினே' எனத் தொல்காப்பியர்கூறியபடி 'திராவிடர்' தமிழியற்சொல்லே எனக் கருதலால் விளையுந் தீங்கென்னை? 'திருவிடர்' என மாற்றுதலால் தமிழ்மொழி அடையும் பயன் யாது.

கே. ஜி. சேஷையர்.

பலகவித்திரட்டு.

(உக-ஆம் தொகுதியின் ருடுகூ-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

ஆயிரத்தெட்டுச் சிவாலயங்கள்.

(ஔவையார் பாடல்).

மூவர்தமிழ்மூந்நூறுமுன்சோழனைஞ்ஞூறு
நாவலர்மாணிக்கர்தலநாற்பததெட்—டோவறுசீர்
நூதனமில்லாலயங்களூற்றறுபதுங்கூட
வோதவருமாயிரத்தெட்டோர்.

யாப்பிலக்கணங்கற்போர் சிந்திக்கவேண்டுவது.

(தாவுமுதலியவற்றிற்குப் பரியாயநாமம்).

எருத்தமெருத்தியலிவைதரவினுக்கு
மிடைநிலைப்பாட்டிடைநிலைதாழிசைக்கும்
விட்டிசைதனிநிலைகூன்றனிச்சொற்கும்
பிரிந்திசைக்குறளேசொற்சீரடியெண்
ணசையடியபபோதரங்கத்துக்கும்
வண்ணமுடுகியல்வண்ணகமினனு
மடுக்கியலெனுமிவையராகத்துக்கு
மடக்கியல்வைப்புவாரம்போக்கியல்
சுரிதகத்துக்குஞ்சொல்லுவர்நாமம்.

எழுவகைத்தளை.

மருவுவிளமுன்னர்நிரைநிரையொன்றாசிரிய
மாமுன்னேர்வரினேரொன்றாசிரியத்தளையாம்
விரவுங்காய்முன்னர்நேர்வெண்சீர்வெண்டளையா
மீட்டுங்காய்முனனர்நிரைகலித்தளையாமின்னே
சருதுகனிமுன்னர்நேரொன்றாதவஞ்சி
கனிமுனிரையொன்றியவஞ்சித்தளையாமாமுன்
னிரையும்விளமுன்னேருமியற்சீர்வெண்டளையா
நிழல்கனியாம்பூக்காயாநிகழ்பொதுச்சீர்த்தளைக்கே.

தனிசிதைய வருமிடத்து வல்லினமல்லாதவொற்றுக்கள் அலகுபெறுமென்பது.

சொல்லாறுவல்லினமல்லாதவொற்றிடைதோய்ந்துவரி
னில்லாதுநேர்நிரைநேரென்றுரைப்பர்நிறைந்தகல்வி
கல்லாதமாந்தர்கூடமாங்கனியென்பர்கற்றறிந்த
நல்லார்வளம்படுகூவிளங்காயெனநாட்டுவரே.

தேவாரப் பண்வகை பதினெட்டு.

புறநீர்மைகாந்தாரங்கௌசிகமிந்தளமே
புகழ்பெறுதக்கேசிநட்டராகநட்டபாடை
நறியபழம்பஞ்சுரங்காந்தாரபஞ்சமஞ்சீர்
நன்மைபெறும்பஞ்சமத்தோடீரைந்தும்பகற்பண்
ணரைதக்கராகமொடுபழந்தக்கராக
மணிசீகாமரங்கொல்லிவியாழக்குறிஞ்சியுநற்
சிறியவந்தாளியுமேகக்குறிஞ்சிகுறிஞ்சியும்ராச்
செந்துருத்திசெவ்வழிதாண்டகம்பொதுப்பண்செப்பே.

பகற்பண் மூன்றுநாழிகைக் கொவ்வொருபண் ணோதலாம்; இராப்பண் மூன்றேமுக்கால்நாழிகைக் கொவ்வொருபண ணோதலாம்; பொதுப்பண்மூன்று மிரவும் பகலு மோதலாமென்பர்.

பகற்பண்ணுக்கிராகம்.

கருதுபுறநீர்மைக்குச்சிகண்டராகங்
காந்தாரநவரோசுகௌசிகம்பைரவியே
யுரிமையிந்தளம்லளிதபஞ்சமந்தக்கேசி
யோதுகாம்போதிநட்டராகம்பந்துராளி
பெருநட்டபாடையிராகநாட்டைக்குறிஞ்சி
பெருகுபழம்பஞ்சுரந்தான்சங்கராபரண
மருள்காந்தாரபஞ்சமந்தான்கேதாரகௌவுள
மானபஞ்சமந்தானுகரிபகற்பண்பத்தே.

இராப்பண்ணுக் கிராகம்.

தக்கராகத்துக்கேயதுகுலகாம்போதி
சாற்றுபழந்தக்கராகத்துக்கிராகமிலே

மிக்கசீகாமரந்தானுதநாமக்கிரியை
மிருகொல்லிக்கிராகமிலவியாழகுறிஞ்சிக்கே
வைக்குஞ்செளராட்டகமேகாரகக்குறிஞ்சிக்கு
வருவதுநீலாம்பரியந்தாளிகுறிஞ்சிக்குப்
பக்கமுறுகாம்போதிகுறிஞ்சிமலகிரியாம்
பகருமிராப்பண்ணெட்டாம்பாடுவிர்நாவலரே.

பொதுப்பண்ணுக்கிராகம்.

மன்னுசெந்துருத்திக்குவாழ்த்துமத்தியமாபதியா
மன்னதிருத்தாண்டகம்பியாகடையே—முன்னமுறை
செவ்வழிப்பண்ணுக்குத்தெரிந்துரைக்கும்ராகமிலை
யிவ்விதமூன்றும்பொதுப்பண்ணே.

சங்கமத்தைவழிபடுதல்.

கேநதனத்தமூலையிலிங்கங்குருவாமேனி
கூறியசங்கமமுகமாங்கூறிக்குங்காலை
போதமூலைபொழிந்திடுமென்றதற்கன்பாகப்
புல்லளிக்கிலருந்தியிடாதுடலங்கொள்ளா
நீதியினலருந்துமுகத்தளித்தாலெங்கு
நிறைவாகுமுத்திசிவலிங்கத்தேனு
மேதமிலசங்கமத்தைவழிபடுவார்க்கன்றி
யெய்தரியசிவாநுபவமெய்தொணுதே.

விபூதிகொடுத்தல்.

அழித்திடுமங்குட்டமத்திமையுங்கூட்டி
லதிகசெல்வம்விலக்குமநாமிகையுஞ்சேர்த்தால்
வழுத்தியவாயுசும்பசுவுங்சொநிக்கும்பெற்ற
மைந்தரைப்போற்றுங்கநிட்டைவிரலைத்தாங்கிற்
பழிப்பிலையுத்தமமங்கையளித்தாற்றீமை
பற்றுமாசாரியன்பாலுலகந்தணனின்
மொழிப்படியேயடியார்கள்வெண்ணீறெற்கின்
முன்புவிசாரித்தொழுகினலனுண்டாமே.

மவியுற்றயோகிக்கும்வாத்திமையோர்க்கும்வண்ணார்களுக்கு
மிவரெட்டுப்பேருக்கும்வெய்யதரித்திரமெய்திடுமே.

[குவி—சுவர். அவி—அடங்குதல்.]

தேவாரப்பதிகத்தொகை.

செப்பற்கரியதிருஞானசம்பந்தர்செய்ததமி
ழப்பத்தறுபதினாறாயிரமப்பரோதியபாட்
டொப்பற்றநாற்பத்தொன்பானருமாயிரமூரானுரை
முப்பத்தேழாயிரமென்றேபெரியர்மொழிகுவரே.

தழைவிருப்புரைத்தல்.

மேதிக்குலஞ்சொரிபால்கயன்மாந்தும்விரைப்பழன
மதைக்கடவுள்சடாடவியோமணிப்போணியோ
வாதித்திருநகையோவிழியோசெவ்வையம்பினம்போ
போதுற்றசேவடியோவையமீதந்தபூந்தழையே.

[மாதை—ஆமாத்தூர். இப்பழங்கவி ஆமாத்தூர்க்கோவையிலுள்ள
தோ அல்லது தனிக்கவியோ தெரியவில்லை.

நாழியளவு.

நூறாயிரத்தொருபத்தைபாயிரத்திருநூ
றேறுதொருநாழியெள்ளென்ப—வீறும்
பருநெல்லுத்தான்பதினாலாயிரத்துநானூ
றரிசிபதினெண்ணாயிரம்.

மனுக்கள்பதினால்வர்பெயர்.

ஆனசுவாயம்புசுவரோசிடனுத்தமன்ருபமநுவென்றுங்கு
மானரைவதன்சாட்சுசன்வைவைச்சுதன்சூரியசாபநுனனி
தானசாபர்னனிருத்ரசாபருன்னியச்சுவசாபர்ன்னிகலவித்
தானபிர்மசாபர்ன்னிதட்சசாபனனிதர்மசாபர்னியீரேழே.

என்பது—சுவாயம்புமநு, சுவரோசிடமநு, உத்தமமநு, தாபமநு, ரைவதமநு, சாட்சுசமநு, ஆக மநுக்கள் அறுவர் முன்னுள்ளவர். இப்போதுள்ளமநு வைவச்சுதமநுவாம். இனிமேலுள்ளமநுசூரியசாபான்னிமநு, சாபர்னனிமநு, ருத்திரசாபர்ன்னிமநு, அச்சுவசாபர்ன்னிமநு,

பிர்மசாபர்ன்னிமநு, தட்சசாபர்ன்னிமநு, தர்மசாபர்ன்னிமநு ஆக எழுவர். ஆக மநுக்கள் பதினால்வரென்றவாறு.

பெண்கள் ருதுவானபோது கட்டியிருந்த புடவை கொம்பினாற் கிழிந்தது, தீப்பட்டது எலிகடித்தது ஆகவிருந்தாற் பலனறிக.

திட்டமாந்திரட்சிகொம்புதீயெலிபட்டகூறை
வட்டமேற்பொருளாளீன்மரணமாமூலையானாற்
பட்டவாணுதலைநோவாம்பகருமக்கூறைதனனிற்
சட்டமாய்ச்சதுரமாகிற்சத்துருநாசந்தானே.

இராசபாளையஞ் சங்கரமூர்த்திக் கவிராயர் சேற்றூர்ச் சமஸ்தானத்திற்கு வந்தபோது எழுதிவிடுத்த வெண்பா.

செந்தமிழிற்கும்பன்பாச்செய்வதனிற்கம்பனுடன்
வந்தெதிர்த்ததோர்தங்களுக்குமார்பாணி—சந்ததமு
நங்கருணைமீனாட்சிநாதவேளீன்றெடுத்த
சங்கரமூர்த்திக்கவிராசன்.

இவர் மூன்றாந்திருநாளிற் கூறியகவி.

பாகசாதனர்போற்றுஞ்சேறைவிழாமூன்றிற்றம்பத்தாவென்னா
மேகநாதனைவீதிதன்னிலேயொருபூதமெடுத்துக்கொண்டு
போகையிலேமனஞ்சகியாள்பெற்றநாயகிசூலப்போர்வேலேந்தி
வகைசூடியவீரசிங்கவாகனமேறிவருகின்றாளே.

இச்சேறைச் சிவப்பிரகாசத்துரை போசனஞ்செய்து கரசுத்திக்கு வரும்போது வந்த இச் சங்கரமூர்த்திக் கவிராயரை யுபசார வழைப்புக்கூற அப்போது அவர் கூறிய வெண்பா.

ஒருகையிலேயன்னமொருகையிலேசொன்னம்
வருகையிலேசமானவார்த்தை—பெருகுபுகழ்ச்
சீமானுமெங்கள்சிவப்பிரகாசத்திருவக்
கோமானுக்குள்ளகுணம்.

[போசனம்பண்ணும்போது வலக்கைமோதிரத்தை யிடக்கையிலிட்டிருந்தமையால் 'ஒருகையிலே சொன்னம்' மென்றாரெனக.]

இங்ஙனம்,
மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகரும்,
திருவாவடுதுறையாதீன வித்துவானுமான,
சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

இராமகுட நாடு.

லண்டன்மாநகரத்தினின்றும் பிரசுரிக்கப்படும் ராயல் ஏஷியாடிக் சங்கத்தின் 1922-ம் ஆண்டின் ஏப்ரல்மாத சஞ்சிகையில், இப்பொழுது திருவநந்தபுரராஜ்யத்திற் கல்வெட்டுப் பரிசோதகராயிருக்கும் திருவாளர் K. V. சுப்பிரமணிய ஐயரவர்கள் (B A , M R A S) தென்னிந்தியாவில் தெரிந்துகொள்ளப்படாத நாடு (An un-identified territory of South India) என்று மகுடமிட்டுப் பதினொந்து பக்கங்கள் கொண்ட ஒரு கட்டுரை எழுதி வெளியிட்டுள்ளார்கள். அவர்கள் எழுதியவற்றின சாரம் வருமாறு:—

மேலைத்தொடர்ச்சிமலைக்கு மேற்கிலுள்ள நாடுகள் மலையாலும் சூழப்பட்டிருப்பதால், ஒருவராலும் அடைய முடியாததாயும், ஆங்குக் குடியேறியிருப்பவர்களது வாழ்வு இப்படிப்பட்டதென்று கூறமுடியாததாயும் இருந்துவந்திருக்கிறது. அப்படியிருந்தநாட்டில, தென்னிந்தியாவிற் கீர்த்திவாய்ந்திருந்த அந்தத் தைரியசாலியாகிய முதலாம் ராஜராஜனென்னும் சோழசக்கரவர்த்தி படையெடுத்துச்சென்று சொல்லத்தையும் கொல்லதேசத்தையும் வென்றான். அவனோடு அவன்மகனான ராஜேந்திரசோழனை சென்றுவந்தான. இவன் மெய்க்கீர்த்திகளை ஊன்றிப் பார்ப்போமானால் இவன் சோழர்களிற் பெரியோனெனச் சொல்லத் தடையில்லை இவனுடைய போர்களெல்லாம் இவனுடைய மகனான ராஜாதிராஜனால் நடத்தப்பட்டன. இவ்விராஜாதிராஜன் 1018 லேயே இளவரசனாக நியமிக்கப்பட்டிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. இல்லாவிடில் இவன் சிம்மாசனம் ஏறிய 1045 லிருந்து 1050-க்குள் மெய்க்கீர்த்தியிற்கண்ட காரியங்களைச் செய்திருக்கமுடியாது. மெய்க்கீர்த்தியிற்கண்டவற்றுள, சேரவாசாட்சி சம்பந்தப்பட்டவைகளைப்பற்றிக் கூறுவதற்கும், அந்நாட்டின் உட்பிரிவுகளைத் தெரிந்துகொள்ளுவதற்கும் கூடவில்லை. இவ்விதம பிடிபடாததும் தெரிந்துகொள்ளாததுமான நாடு ராஜாதிராஜனுடைய கல்வெட்டுக்களில் இருக்கின்றது.

பாண்டியர்களை ச்சயித்தபிறகு அந்தராஜேந்திரசோழன் சேரநாட்டிற்குச் சென்றனன். அவன் நடத்தியபோர் பின்வருமாறுவருணிக்கப்படுகிறது.

"ஒல்கலில்,வேணாட்டரசைச்சேணாட்டொதுக்கி
மேவுபுகழிராமகுடமூவர்கெடமுனிந்து
மிடல்கெழுவில்லவன் குடர்மடிக்கொண்டுதன்
னாடுவிட்டோடிக்காடுபுககொளிப்ப
வஞ்சியம்புதுமலர்மலைந்தாங்கெஞ்சலில்
வேலைகெழுகாந்தளூர்ச்சாலைகலமறுத்தருளி"

என்று காணப்படுமிவ்வடிகள் தனிப்பட்ட ஒரு போரைக் குறிக்கின்றன. இவற்றின் பொருளாவது:--"ஜயிக்கமுடியாத வேணாட்டு அரசனை வானுலகிற்சேர்த்து, இராமகுடத்தின மூன்று அரசர்களைப பழிக்கும் படியாகக் கடுமபோர் புரிந்து, வயிறுமடித்துககொண்டு வில்லவனை சேரன் ஓடும்படியும் செய்து, அழகான வஞ்சிமலர்மாலைசூடிக் காந்தளூர்ச் சாலையிலிருந்த கப்பல்களை யழித்து" என்பதாம்.

மேற்குறித்த கல்வெட்டிற் காணப்படும் பெயர்ச்சொற்களான வேணாடு, இராமகுடம், வில்லவன், காந்தளூர்ச்சாலை என்பவற்றுள் வேணாடு என்பதைப் பிரித்து எவ்விதம் கொண்டாலும் அது ஒரு நாடு என்பதும், வில்லவன் என்பது சேரனைக்குறிக்கும் என்பதும், காந்தளூர்ச்சாலை என்பது சேரநாட்டிலுள்ள ஒரு கடற்கரைப்பட்டின மென்பதும் யாவரும் அறிந்தவிஷயம். இப்பொழுது தெரியாதிருப்பது இராமகுடமே.

இனி, இராமகுடத்தைப்பற்றி யாராய்வோம். இதனை இரா + மகுடம் என்றும், இராம + குடம் என்றும் பிரிக்கலாம். ஆனால் இரா + மகுடம் என்பதிற் பொருள்விளங்குமாறில்லை; ஆகையால் இராம + குடம் என்பதை ஸம்ஸ்க்ருதப்ரயோகம்கொண்டு பார்ப்போமானல் ராம + கட என்பதற்குப் பொருந்தும். ஆகவே, அது ராமகடமாகவே யிருக்கலாம். சென்னைக் கல்வெட்டுச்சாலையிலுள்ள ராஜாதிராஜனது கல்வெட்டுக்களைப் பார்ப்போமானல் இராமகடம் என்ற எழுத்துக்களை யுடைய கல்வெட்டுப்பிரதிகளையும் காணலாம்? ஆகையால் இது ராமகட மென்பதே நிச்சயம்.

ராமகுடம் ராமகடமாகவே, அது இருந்த ராச்சியந்தான் எது வெனில் அதனை மூஷகராச்சியம் என்று கூறுவோம். அதன் எல்லையும் கன்னடப்பிரதேசமாகும். இந்த மூஷகவம்சவரலாறு வருமாறு:—

முன்னொருகாலத்திற் பரசுராமர் ஒரு க்ஷத்திரியனைக்கொன்ற போது கருப்பவதியாயிருந்த அவன மனைவி உடன்கட்டையேறத் துணிந்தனள். அந்நாட்டு மந்திரி அவளைத்தடுத்துத் தூரத்திலிருந்த ஒரு குகையில்வைத்துக் காப்பாற்றிவந்தான். அங்கே யானையவ்வளவு பருமனான ஒரு எலி அவளை விழுங்கவந்தது. அவள் தனது கோபாக் கினியினால் அதனைச் சாம்பராக்கினாள். பின்னர் அவட்கு ஒரு ஆண் பிள்ளை பிறந்தது. வளர்ந்துவந்த அப்பிள்ளையிடத்தில் அன்புடைய ராய்ப் பரசுராமர் அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்துவைத்தனர். அவனுக்கு மூஷகராமகடன் என்று பெயராயிற்று. அந்தராஜ்யம் மூஷக ராஜ்யம் எனப்பட்டது. இந்தராஜ்யமே கோலாத்ரி அரசர்கள் வசிக் கின்ற பிரதான ஆற்றின்கரையிலுள்ள கோலம் என்னும் ஊரைத் தலை நகராகவுடைய எலிமலைராஜ்யம். இந்நகரிலிருந்து வப்ரா, கிள்ளா என்ற ஆறுகளைக் கடந்து எலிமலை செல்லவேண்டும். இந்நாட்டில் அநேக மூஷகவம்ச அரசர் ஆண்டிருக்கின்றனர். ஆகவே, இக்கல்வெட் டிற்கண்ட இராமகுடமூவர் என்பது மூஷகராஜ்பத்தையாண்ட மூவர் என்பதை விளக்கும் என்பதுதான் ஐயாவர்கள் எழுதியதன்சாராம்சம்.

இவர்கள் இவ்வாறெழுதுவதற்குச் சாதகமாகவிருந்தகல்வெட்டின் முதற்பாகம் வருமாறு:—

"திங்களேர் தருதன்றொங்கல்வெண்குடைக்கீழ்
நிலமகணிலவமலர்மகட்புணர்ந்து
செங்கோலோச்சிக்கருங்கலிகடிந்துதன்
சிறியதாதையுந்திருத்தமயனுங் கறிக்கொள்தன்
னிளங்கோக்களையுநெறிபுணர்தன்றிருப்
புதல்வர்தம்மையுந்தன்றியதெறுசில்
வானவன்மல்லன்மீனவன்கங்க
னிலங்கைபர்க்கிறைவன்பொலங்கழற்பல்லவன்
கன்னகுச்சியர்காவலனென்னப்
பொன்னணிசுடர்மணிமகுடஞ்சூட்டிப்

படர்புகழாங்சவர்க்கவர்நா டளிப்ப
ஆங்குறுதெனனர்மூவருள்
மாஞபரணன்பொன்முடிஆனுப்
பருமணிப்பசுந்தலைபொருகளததரிந்து
வாரளவியவீரகேரளனை
மூனைவயிற்பிடித்துத்தனதுவாரணக்
கதக்களிற்றுனுதைப்பித்தருளி
அந்தமில்பெரும்புகழ்ச்சுந்தரபாண்டியன்
கொற்றவெண்குடையுங்கற்றைவெண்கவரியும்
சிங்காதனமும்வெங்களத்திழந்துதன்
முடிவிழத்தலைவிரித்தடிதளர்ந்தோடத்
தொல்லைமுல்லையூர்துறததிபொல்கலில்
வேணுட்டரசைச்சேணுட்டொதுக்கி
மேவுபுகழிராமகுடமூவர்கெடமுனிந்து
மிடல்கெழுவில்லவன்குடர்மடிக்கொண்டுதன்
ஞடுவிட்டோடிக்காடுபுக்கொளிப்ப
வஞ்சிபம்புதுமலர்மலைந்தாங்கெஞ்சலில்
வேலைகெழுகாந்தளூர்ச்சாலைகலமறுத்து
ஆகவமல்லனுமஞ்சக்கேவுதன்''

என்று காணப்படுகிறது.

இதனில் 12–வது வரிவரையிலுள்ளவை தனது சிற்றப்பனையும், தமையனையும், தம் மகளுட்சிலரையும், பிள்ளைகளிற்சிலரையும், தான் கைக்கொண்ட ஒவ்வொரு தேசத்துக்கும் ராஜப்பிரதிநிதிகளாக வைத்திருந்தான் என்பதை விளக்குவன. இச்செய்தி பின்னும் சில கல்வெட்டுக்களில் வலியுறுகிறது. இவர்களைக் கொண்ட நாடுகாவலர் Wardens of the Marches என்பர் டாக்டர் S. கிருஷ்ணஸாமி ஐயங்கார்,

மேலேகாட்டியவற்றுள் 13 முதல் 27வரையுள்ள அடிகட்கு யாம் கூறும் பொருள் வருமாறு:–மேல் 13-ம்வரியில் தென்னர் என்று காணப்படுவது சோழநாட்டிற்குத் தெற்கிலுள்ளவர்களைக் குறிக்கும். அவர் மூவராவர். அம்மூவருள் இலங்கையர் அதிபனை மானுபரணனது பொனமுடிபொருந்திய தலையை அரிந்து (13–14), பெருமையுடைய

வீரகேரளன் என்னுஞ்சேரனை யுத்தகளத்தின்முனையிலேபிடித்துத் தன்னுடைய பட்டத்துயானையைவிட் டிடறும்படிசெய்து (15–17), ஒருநாளும் கெடாத பெரிய புகழையுடைய சுந்தரபாண்டியன், ஐயம் பொருந்திய வெண்கொற்றக் குடையையும் கற்றையாகிய வெண்கவரியையும் சிங்காதனத்தையும் பொருகளத்திலே இழந்துவிட்டுத் தன் தலையிலிருந்த கிரீடம் விழும்படி காலடி தளர்ந்து ஓட முல்லையூர்வரையிற் றுரத்தி (18–21) குறையாதவேணாட்டிலுள்ள அரசரைக்கொன்று (22), இப்படியாகவந்த புகழில்லா மூவர்மகுடமும் கெடும்படி கோபித்து, பலம்பொருந்திய வில்லவன் குடர்மடியும்படி தன்னாடுவிட்டுக் காட்டில் ஓடி ஒளிந்துகொள்ளும்படி வஞ்சிமலர்மாலைசூடி, காந்தளூர்ச்சாலையிலுள்ள மரக்கலங்களையழித்து (27) என்பதாம்.

ஐயரவர்கள் கூறியதற்கும் இதற்குமுள்ள வித்தியாசம் வருமாறு:—

1. இரா+மகுடமன்று; இராம+குடமென்பது.

2. அது மூஷகநாட்டைக் குறிக்குமென்பது.

ஆயினும், அவர்களே மேற்கூறிய உரைநடையில் முனிந்து என்பது இறந்தகாலத்தைக் காட்டும் வினையெச்சம் என்று கூறியிருப்பதால் அதனைப் பற்றிய சங்கை யொன்றுமில்லை. இம்முனிந்து என்ற வினையெச்சம் இனிவரும் அரசாண்டனன் அல்லது வீற்றிருந்தருளிய என்ற சொல்லைக்கொண்டுமுடிவது. முனிந்து என்ற செயப்படுபொருள் குன்றுவினையின் செயப்படுபொருள் மூவர் என்பது. இப்பன்மைப் பெயர்ச்சொல்லின்பின்னிற்பது மகுடமென்பது. ஆகவே, மகுடமூவரென்பது. இம்மூவர் யார் என்ற வினா வெழும்போது மேல் 13-ம்வரியிலுள்ள தென்னர் மூவர் என்பது விடையாகும். அத்தென்னர் மூவராவார் இலங்கையர்கோனான மானாபரணன் சேரன் வீரகேரளன், பாண்டியன்–சுந்தரன் என்பவராவர். இவர்கள் புகழ்மேவிஇராத மகுடமூவராவர். இவர்கள் முடிகெடும்படி சோழன் கோபித்தானென்பதாம். மேலும் 13-வது வரியிலுள்ள மூவருள் என்பதிலுள்ள உள் என்ற ஏழாம்வேற்றுமைப்பொருள்பயக்கும் சொல்லையும் ஆராயவேண்டும். இந்த உள் என்ற சொல்லாற் சோழராச்சியத்திற்குத் தெற்கிலுள்ள

ராச்சியாதிபதிகளான மூவரிலே ஒருவனை என்பதைப் பிரித்துகாட்டுந் தன்மை விளங்கும் இப்படியே ஒருவனை அரிந்தும் ஒருவனை உதைப் பித்தும் ஒருவனைத் தாத்தியும் ஆக மூவரையும் கெடமுனிந்தும் என்று பொருள்கொள்ளவேண்டும். இவ்வாறு பொருள்கொள்வதற்கு 'வேணாட் டரசைச் சேணாட் டோதுக்கி' என்று நடுவிற்காணுமொரு அடி தடை யாகாதோவெனின் ஆகாது ; இவ்வரசு நடுவிலுள்ள ஒரு வேளை யன்றி மகுடமணிபக்கூடிய பேரரசன்று ; அன்றியும், இரண்டு பே ரரசுகளுக்கு நடுவண்உள்ள இடைநாட்டாசனுமாகலாம். இக்காலத்து, ஐரோப்பியவல்லரசுகட்கிடையிலுள்ள பெல்ஜியத்தை இடைநாடு (Buffer State) என்பதை ஆராய்ந்தால் இதனுண்மை புலனும். ஆகவே இடைப்பட்ட வேணாட்டாசைக்கொன்று என்றார். இதனாற் பொருள் குன்றாது. இவைகளால் மேவு + புகழ் + இரா + மகுடமூவர் என்று கொள்வதே தகுதியும் செம்பொருள் பயப்பதுமாம்.

இனி, ராமகுடமூவர் என்று கொண்டாற் குற்றந்தானென்னை யெனின்,

(1) இதற்கு முன்னாவது பின்னாவது இதுமாதிரியான நாடொன்று இருந்ததென்று ஒரு கல்வெட்டிலும் படித்தோ மில்லை.

(2) கல்வெட்டுக்களில் ராமகுட என்று காணப்படுவதனை ராமகட மென்றுகொண்டு பொருள்கொள்வது தகுதிவழக்கன்று இராமகுட என்பதில் மகர உயிர்மெய்யை அடுத்து நிற்கும் எழுத்து க வைப்போற் காணப்படுகிறதென்றால் அவ்வாறு அதனைக்கொள்ளாது கு என்று தான் இதுவரை படித்து வருகின்றனர். இப்பொழுது மாத்திரம் திரித்துப் பொருள்கொள்வானேன்.

(3) இதுவரை மெய்க்கீர்த்திகளிலெல்லாம் ஒருவன் வென்ற நாட் டினரையெல்லாம் கூறுமிடத்து அங்கிட்டின்பெயரையோ

அரசன்பெயரையோகூறுவது வழக்கமாகலின், ஈண்டும் மூஷக வாசர்களை என்று நாட்டின்பெயரையாவது, மானுபரணன், சுந்தரபாண்டியன் வீரசோழன் என்பதுபோல அரசன் பெயரையாவது கூறல்வேண்டும். அப்படியொன்றுமில்லை.

(4) இடுகுறிப்பெயர்க ஏற்பட்ட மரம், புல், தலை, கண் போன்ற சொற்களைத்தவிர மற்றச்சொற்களெல்லாம் முதலிற் காரண காரியப்பொருட்டாகிநின்று பொருளையுணர்த்திப் பின்னரே இடுகுறியாக வழங்கக்காண்கிறோம். உதாரணமாக 'இராமன் என்னும்பெயர் இரமிக்கப்படுவதென்னும் பொருளைப் பயப்ப தாய் அதனை உடையானை முதலிற் குறிப்பித்தபிறகன்றோ இப்பொழுது கட்டு முறுப்புங் கரணமுங் கொண்டதொரு மெய்யுடையானுக்கு இடுகுறியாக வழங்கப்படுவது. அது போலன்றோ ராமகுடமும் ஏற்படவேண்டும். அன்றியும், ராமரால் கடம் கொண்டு ஆட்டுவிக்கப்பட்டான் ஒருவன் இருப்பானாயின், அவ்வரலாற்றைக் குறிக்குஞ் சொல் 'ஆன்' அல்லது 'ஆர்' விகுதிபெற்றிருக்கவேண்டும். இராம+கட+ மூவர் என்றபோது இவர்கள் கூறுவதுபோலக் கொண்டா லும் கடத்தால் ஆட்டுவிக்கப்பட்ட மூன்று வெவ்வேறு அர சர் என்று பொருள்பயப்பதல்லது ஒரேவமிசத்தினர் என்று பொருள் தராது. அவர்களும் ஒரேகாலத் திருந்திருக்க விய லாது. இவைகளன்றி, இராமன் என்பது, மூன்று இராமர் களைக் குறிக்குமென்பது ஐயரவர்கள் அறிந்ததொன்றும். அம் மூவர்களுள் இங்குக்கூறிய இராமர் இன்னாரென்று நிச்சயித் தற்குரியசொல் ஒன்றையும் காண்கிலேம். மலையாளநாடே பரசுராமக்ஷேத்திரமென்போமாயின் அது ஒரு புனைந்துரை என்றும், இயற்கையின்றேழிலாற் கடல்வற்றி நாடாயிற் றென்றும் பிரபல நியாயங்கள் காட்டி கிருஷ்ணபோதுவல்

என்ற மலையாளவாசி ஒருவர் முன்னரே நிரூபித்திருக்கின்றனர். இவர்களோடு நில்லாது காலஞ்சென்ற கனகசபைப் பிள்ளையவர்களும் சில ஆதாரங்களைக்காட்டி அங்ஙனமே நிகழ்ந்திருக்கவேண்டுமென்று எழுதியுள்ளார்கள். ஆகவே இது பொருந்துமாறில்லையென்பது தெளிவாகின்றது.

(5) தமிழ்ச்சொற்களைப் பிரித்துப் பொருள்கொள்ளும்பொழுது முன்பின்னுள்ள அடைமொழிகளைக் கவனித்துப் பொருள் கொள்ளுவது மரபு. ஈண்டு இராமகுடமூவருக்குப் பின்னுள்ள சொற்கள் மேவுபுகழ் என்பன. இவற்றின்பொருள்—அடைந்த கீர்த்தி என்பதாம். அது இன்னதென்த் தெரிந்தார் இதுவரை ஒருவருமில்லை. அன்றியும் அவர்கள் கூறும் கேரளோற்பத்தியாவது கேரளமாஹாத்மியமாவது கூறவும் கேட்டோமில்லை. இவர்களும் கூறினார்களில்லை. இவ் அடைமொழிகள் ஒருவரைப் பற்றாது மூவரைப் பற்றுகின்றன என்பதும் கவனிக்கவேண்டும். அவர்களுள் யாராவது ஒருவருடைய புகழாவது தெரிந்திருக்கலாம். இல்லாவிடினும் வேறு பல்வகைப்பட்ட கல்வெட்டுக்கள் பட்டையங்களிலாவது இருந்து கல்வெட்டுப் பரிசோதகர்கள் பொருளுரைகளி (Reports) லாவது காணப்படலாம். அப்படியொன்றையும் கேட்டோமில்லை. ஆகவே இது பொருந்துமாறில்லை.

ஆகவே இதுவரையிற் கூறியதுகொண்டு "மேவு புகழ் இரா மகுட மூவர்" என்று பொருள்கொள்வதே தகுதியுடையதாம்.

இலக்கணவிளக்கபரம்பரை,

திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

பூஞ்சோலைகாவலன்.

[செந்தமிழ் உ௰-ஆம் தொகுதியின் ௩௰௭-ஆம் பக்கத்தொடர்ச்சி]

வங்கமொழிக்கவிவாணர் தென்றமிழ்நாட்டுக்கு வந்திருந்தகாலையிற் சங்கநூற்செல்வத்தைத் தமிழுலகிற்குதவிய பெருந்தகையாரது திருமனைக்குச்சென்று கலந் துறவாடினாராதலினால், இருபெரும்புலவருக்குமிடையே யொருபெருங்கேண்மையுளதாயிற்று. சின்னாட்களின்முன்னர், யான் நம்புலவர்பெருமானுழைச் சென்றிருந்தபொழுது, அவர் தாம் வங்கமகாகவியினது கவிவனப்பையுணர்வதற்கு எனது மொழிபெயர்ப்பு ஒருவாயிலாயிற்று என உரைத்ததுமன்றிச் "செந்தமிழி"ல் வெளிவந்த "பூஞ்சோலைகாவல"னைத் தொடர்ந்தெழுதி வெளியிடல்வேண்டுமெனவும் பணித்தருளினார். செந்தமிழபிமானிகள் வேறுசிலரும் அங்ஙனமுரைத்தாராதலினால் என்னாலியன்றசெய்தற்கு முன்வந்தேன். மொழிபெயர்ப்பு இனிது நிறைவேறும்வண்ணம் நல்லிசைப்புலவர்நாவினடம்புரிகின்ற சொல்லின்கிழத்தியாகிய மெல்லியலருள்புரிவாளாக. "பணியாளன்றனக்கிரங்கி" என்னும் முதனிலையுடைய முதற்செய்யுளும் "புலவ!, மாலைப்பொழுதுஞ்சாலவந்திறுத்தது" என்னும் முதனிலைபெற்ற இரண்டாஞ்செய்யுளும் முன்னமே வெளிவந்தன.

மூன்றாஞ்செய்யுண்மொழிபெயர்ப்பு வருமாறு :—

உலகுதொழுமிளம்பரிதி
மலர்கிரணவகைபரப்பி
வேலைமுகட்டிலிருள்கடிந்தெழுந்த
காலைப்பொழுதிற்கடற்புறஞ்சார்ந்தங்
கலைநீர்த்தண்ணகன்பரப்பில்
வலைவீசிவலிந்திழுத்தேன்,
ஆங்கு,
புன்முறுவல்பூத்ததெனக்
கண்ணீர்த்துளிகான்றதெனப்

பெண்ணீர்மைப்பெருவனப்பின்
வண்ணமணமகள்முகத்தின்
உண்ணின்றெழுதருமுவகையீங்கிதுவென
வேறுவேறுருவின்வேறுவேறுபல்பொருள்
காராழியிருணீத்துச்
சீராருங்கரைசேர்ந்தன ;
அவற்றை,
வாரியெடுத்துத்தோண்மேலிட்டு
மனையகநோக்கிவந்தென்காதற்
கணிகலமாகியவஞ்சொன்மடமொழி
போதிதழ்கிள்ளும்பொழுதுபோக்கில்
ஏதமற்றிருந்தவினியாண்முன்னர்
ஒருகணமறுகித்துணிவுற்றணிபிறை
மெல்லடிப்பாங்கரப்பல்பொருள்வைத்துச்
சொல்லாடாதவள்சொற்பெறநின்றனன் ;
நல்லாள்,
கடைக்கணோக்காலென்கையுறைநோக்கிப்
பல்வகைக்கோலச்சில்பொருளிவைதாம்
தருபயனெதுவெனச்சாற்றியமாற்றம்
என்செவிப்பட யான்,
நாணத்தாற்றலைவணங்கி
மாணுற்றவருஞ்சமரிற்
பகைதடிந்துவிறல்காட்டிப்
பெறுபொருளிங்கிவைபல்ல
பொன்விலைகொடுத்தபொருளுமலவால்
இன்னுயிரனையாட்கிவைதகாவெனத்
தனிநிசியிற்றுனியுடனே
எடுத்தெறிந்துத்தெருப்புறத்தில்
வீசினன்மறுநாள்விடியலில்வழிச்செல்
வோர்பலர்குழுமியொவ்வொன்றுமெடுத்
தகனிலமருங்கிற்பலவயிற்கிடந்த
சேயதம்மூர்க்குக்கொண்டுசென்றனரே.

இச்செய்யுளின்கண்ணே "புன்முறுவல்பூத்ததெனக்—கண்ணீர்த் துளிகான்றதெனப்—பெண்ணீர்மைப்பெருவனப்பின்—வண்ணமணமகள் முகத்தின்—உண்ணின்றெழுதருமுவகையீங்கிதுவென—வேறுவேறுருவின்வேறுவேறுபல்பொருள்" எனக் கவிஞர் எடுத்துரைத்தன பல்வேறு பொருளவாகத் தாமியற்றிய கவிகளையென்க; புன்முறுவல், கண்ணீர், உவகை யென்னுமிவை கவிச்சுவைகளாகலான். "காராழி" யென்றது அறிவுக்கடலை. "காலைப்பொழுது"என்றது கவிஞரது இளம்பருவத்தை. "சாதற்கணிகலமாகிய அஞ்சொன்மடமொழி"யென்றது தமது சொந்தத் தேயத்தை. வழிச்செல்வோர் சேயவூர்க்குக் கொண்டுசென்றாரென்றது தமது கவிதைகத்தைத் தமது நாட்டினர் புறக்கணிக்க வேற்றுத்தேயத்தார் மகிழ்ந்தேற்றுக் கொண்டுசென்றாரென்பதைக் குறிப்பது.

நாங்காஞ்செய்யுண்மொழிபெயர்ப்பு வருமாறு:—

(நான்கடிமேல் ஈரடிவைப்பு)

திருவார்மனையைக்கடைக்கேருந்தெருவிலமைத்தாரெமரையோ
வருவார்போவார்தத்தமது மனத்தின்வண்ணம்வழிச்சென்றார்
தருவிற்பாரத்தோணியினைத்தளைந்தார்யாரும்பேசாது
மருவியிருந்தேனென்வாணாள்வறிதுகழிந்துபோயதையோ
வறிதுகழிந்துபோயதென்றன்வாணாளையோவருவோரைத்
திறலீர்வாரீரிவணென்னச்செப்பவென்னான்முடியாதே.

இரவும்பகலுங்காலரவமிடுவார்கடைவாயிற்புறத்தில்
விரைவில்வருவார்தமைநோக்கிவீணேயும்மையானறியேன்
உரவீரென்றேன்புதியாலருதிரமுயிர்ப்பாற்சனவினுல்
விரலின்பரிசத்தாலறிந்தேன்மேவாதீரென்றுரையேனல்
மேவாதீரென்றுரையாதுவிரும்பியெவருமித்திசையே
ஓவாதென்றன்மனைநோக்கியுவந்துவருவீரெனவழைத்தேன்,

காலைப்பொழுதிலாலயத்திற்கண்டநாதமெழுஞ்சமயம்
ஓலைக்குடைகரத்தேந்தியுவந்துவந்தாரடிசிவப்பக்
கோலமுகத்திற்செய்யவொளிகூடவருவார்தமைநோக்கிச்
சீலத்தீர்சீர்வாலொழிமின்தேர்ந்தேனலனென்றுரையேனல்
தேர்ந்தேனலனென்றுணியாதுசெல்வோர்தம்மைவிளித்தெனது
பூந்தோட்டத்திணுட்புகுந்துபூக்கள்கொய்யவம்மினென்றேன்,

மாதேயுச்சிப்பொழுதிலரமனையில்மணியினேசையெழ
யாதோகருதித்தொழில்வெறுத்திவ்வெல்லேவந்துநிற்கின்ருர்
போதார்குழலிற்பூவாடப்புல்லங்குழலினெலிவாட
மீதேவந்தார்தமைநோக்கிமேவாதீரென்றுரைத்திலனல்
மேவாதீரென்றுபாதுவிளித்தன்னுரையென்னரிய
ஆவியனையீர்மரநீழலணைவோம்வம்மினெனவழைத்தேன்.

சீரார்மாலேவந்தெய்தச்சில்வண்டொலிசோலேயினெழவே
யாரோகதவந்தனைமெல்லவசைத்துமருங்குவருகின்ருர்
தேரேன்முகத்தைச்சிறிதுகண்டேன்செப்பமொழிபுக்திசைவானில்
ஆராவமைதிநிலேபுமுறவயல்வந்துற்ருர்விருந்தினரே
அயல்வந்துற்றவிருந்தினரையடையீரென்னத்தடுக்கறியேன்
இபல்சேர்முகத்தையிருட்கண்டேனிரவுங்கனவும்விரைந்தனவே.

"யாதுமூரேயாவருங்கேளிர்" என்ற முதுதமிழ்ப்புலவருரையை நோக்கும்போது கவிஞாயிறுக்கு உலகத்தாரனைவரும் கேளிரேயாவர். ஆதலால் உலகத்தார் அவரில்லத்தைத் தமரில்லமாகப்பாவித்து வருவதும் போவதுஞ்செய்வர். அங்ஙனம் வருவதையும் போவதையும் கவிஞர் தடுத்தற்குச் சிறிது முயன்ருரெனினும் மனமெழாமைபால் வாளாவிருந்தார்; வாளாவிருந்ததுமன்றி அனைவரையுந் தம்பூஞ்சோலேயினுள்ளும் இல்லத்தினுள்ளும் அழைத்து அவரோடு உறவுபூண்டார் என்னும் இப்பொருட்டுறைகளை யுரைப்பது இச்செய்யுள்.

"மட்டுக்கடங்காச்சலிப்புற்றேன்" என்னும் முதனிலேயதாகிய ஐந்தாஞ்செய்யுண்மொழிபெயர்ப்பு முன்னமே வெளிவந்தது. காட்டுக்கிளிக்குங் கூட்டுக்கிளிக்கும் இடையில்நடந்த கூற்றும் மாற்றமுமாக வமைந்த ஆருஞ்செய்யுண்மொழிபெயர்ப்பு வருமாறு.

விதிவசமோமுன்னைவினையின்பயனே
கதிகவரக்கானகத்தைநீத்துப்—புதியகனி
கொத்தித்தின் னுங்கிள்ளைகூட்டிலுறைமென்மழலேத்
தத்தையினேடியபனுதான்.

அன்பேசடவைதாமறைந்தகுதலேமொழி
யின்பொடெடுத்துரைப்பாம்யாம்,

காட்டுக்கிளி (கூற்று)

வாராயென்னன்பேநாம்மணம்விரியுஞ்சோலைசெல்வோம்.

கூட்டுக்கிளி(மாற்றம்)

சீராயிக்கூட்டினுள்ளேசேர்ந்திருந்தாலாகாதோ ?

காட்டுக்கிளி(கூற்று)

சிறைபிணையகூட்டினுள்ளேசிறைவிரிக்கவிடமுமின்றே.

கூட்டுக்கிளி(மாற்றம்)

வெறுவெளியினிதுறையவேற்றிடமுமுண்டோசொல்வாய் ?

காட்டுக்கிளி(கூற்று)

கொண்டல்செறிமலர்ச்சோலைக்கோலக்கவிகூறென்னன்பே.

கூட்டுக்கிளி(மாற்றம்)

பண்டிதர்களுரைமொழிவேன்பக்கல்வந்துகேட்டிருப்பாய்.

காட்டுக்கிளி(கூற்று)

தீஞ்சுவைசேர்கவிநயத்தைச்செப்புவதுமெளிதாமோ ?

கூட்டுக்கிளி(மாற்றம்)

மாஞ்சோலைக்கவிவனப்பின்வளத்தினைநானறியேனே.

எனவாங்கு,

அன்புரைகள்பலகூறியருகணைந்தும்சிறையணைவும்
இன்பினைத்தாம்பெறாமையினாலிதயமெலிந்திருந்தனவே ;
சிறைசெய்யுங்கோல்கடந்துசிந்தைசெல்லநொந்தனவாய்
முறைநின்றும்நோக்கியைந்தும்முறையறியாதிரங்கினவே;
அருகணைவாயென்னன்பேயெனவுரைத்துமார்வத்தால்
வருசிறையைநனியடித்தும்மற்றுமொருபயனிலையே ;
யாதுசெய்வேன்சிறைகடந்திவரவறியேனெனவுரைத்து
மாதுயரமெய்தியதால்வனத்திலுறைபசுங்கிள்ளை ;
மனக்கினியாய்வலியிழந்துமடிந்தவிருசிறையுமையோ
எனக்கதறிவருந்தியதாலில்லுறையும்பசுங்கிள்ளை.

ஈண்டுக் கூட்டுக்கிளியெனக் கவிஞர்கூறியது நகரவாழ்க்கைமேவிய ஒரு நங்கையையெனவும் அவளத்தைமகனாய் நாட்டுப்புறத்திலிருந்து வந்தவொருவனை காட்டுக்கிளியாவானெனவும் ஊகித்தறியக்கிடக்கின்றது.

ஏழாஞ்செய்யுண்மொழிபெயர்ப்புவருமாறு :—

(தலைமகனுலாப்போமுன் மடமகளுரைத்தகூற்று)

திருநிறைபுமிளங்குமாரிவ்வழிபேசிறுபொழுதிற்சேர்வாரென்ன
மூரசெறிபுமொலிகேட்டேனெவ்வண்ணம்பிறதொழிலின் முயல்வேனம்மா
விரைசெறிபுமலர்க்கூந்தற்பின்னலிடுமாபினைநீவிளம்பாய்பொன்னங்
கரைசெறியும்பூந்துகிலோபிறதுகிலோவணிவதெனக்கருதிச்சொல்வாய்.

என்னகருத்தெண்ணியோமருண்டென்னைநோக்குகின்றாயிபம்பாயன்னாய்
மன்னர்மகன்யானிற்குஞ்சாளரத்தைப்பார்திவ்வழியேசெல்வார்
மின்னலெனவிமைப்பொழுதிற்பரிவாரத்துடனகலவியன்சேய்மைக்கட்
கன்னலெனக்குழலோசைகனிந்துருகிப்படிந்துவந்தெங்காதிற்சேரும்.

ஆனாலுமிளமன்னரெங்கண்முன்றிற்கடைவாயிற்கணிமையாக
வானோர்தம்மிறைமைந்தனெனச்செல்வாரன்னாயவ்வனப்புக்காண்பேன்
கோனசைமகன்செலவுகணப்பொழுதேயாயினுமோர்குறையில்லாமல்
யானுடையணிசேர்த்தியலங்கரித்துப்புறநிற்பனறிவாயன்னாய்.

(தலைமகனுலாப்போந்தபின் மடமகளுரைத்தகூற்று.)

திருநிறையுமிளங்குமாரிவ்வழியேயுலாப்போந்துசென்றார்செம்மை
விரிகதிரங்கிரணமவர்மணித்தேரின்மிசைப்படிந்துவீசிற்றம்மா
மருவியென்றன்முகமறைக்கும்பூந்துகிலைநீக்கினேன்மாணிக்கத்தால்
அரிதிழைத்தமாலையினையகற்றியவர்வரும்வழியையடையச்செய்தேன்.

என்னகருத்தெண்ணியோமருண்டென்னைநோக்குகின்றாயிபம்பாயன்னாய்
மன்னர்மகன்யானெறிந்தமாலையினையெடுத்திலரால்வண்ணமான்றேர்
சென்னெறியினுருளின்கீழ்ச்சிதைந்தாரஞ்செந்தூளிசேர்ந்ததன்றிப்
பின்னெவரும்பாணவர்க்குக்கொடுத்தகொடையிதுவென்னும்பெற்றிதேரார்.

ஆனாலுமிளமன்னரெங்கண்முன்றிற்கடைவாயிற்கணிமையாக
வானோர்தம்மிறைமைந்தனெனச்சென்றானன்னாயவ்வனப்புக்கண்டேன்
கோனசைமகன்செலவுகணப்பொழுதேயாயினுமோர்குறையில்லாமல்
யானகமணிமணியையவர்வழியிலெறிந்துநின்றேனறிவாயன்னாய்.

எட்டாஞ்செய்யுண்மொழிபெயர்ப்பு வருமாறு:--

புள்ளினங்களார்க்கும்புலரிப்பொழுதினிலே
பள்ளியறைத்தீபம்பதிந்தணைய—மெள்ள
அமளிதுறந்தெழுந்தேனன்றலர்ந்துவாசங்
கமழுமலர்மாலையொன்றுகைக்கொண்—டமிழ்தனையாய்
சோர்குழன்மேற்சூட்டினேன்சோர்விலாவான்வழிசேர்
சாளரத்தினண்டைதனித்திருந்தேன்—கோளில்
இளங்கதிர்ச்செம்மையியைந்தவிடியல்
வளங்கெழுநீள்வழியேவந்தா—னுளங்கவரும்
நீர்மையான்றேள்சிரத்தினித்திலத்தின்கோவைவெயில்
சாரவொளிவீசுந்தனிமகுடஞ்—சேரவே
பொங்குகின்றவார்வத்தான்போங்கெங்கண் முன்றினின்றான்
எங்கேயவளென்றியம்பினான்—அங்கவன்றான
சொன்னமொழிகேட்டேன்சுடரிழாய்நாணத்தால்
இன்னுமையுற்றங்கிருந்தேனல்—அன்னாள்
இவளேவழிச்செல்லிளையோய்நீதேடும்
அவளிவளேயென்றேனலேன்.

மாலைப்பொழுதின்மணிவிளக்கமேற்றுகின்ற
காலம்வருமுன்கவலையற்றுக்—கோலக்
குழலைக்கையாற்கோதிக்கொண்டிருந்தேன்பொன்னங்
கழலோன்வரவினையான்கண்டேன்—அழகுசெறி
செம்பரிதியின்கிரணஞ்சேருமணித்தேர்பூட்டும்
வெம்பரியின்வாயினுரைமேவவே—அம்பரத்திற்
செங்களபமென்னத்தெருப்பூழிசேரவந்தான்
எங்கேயவளென்றியம்பினான்—அங்கவன்றான்
சொன்னமொழிகேட்டுச்சுடரிழாய்நாணத்தால்
இன்னுமையுற்றங்கிருந்தேனல்—அன்னாள்
இவளேவழிசென்றிளைத்தோய்நீதேடும்
அவளிவளேயென்றேனலேன்.

வேனிலிரவின்விளக்குமனைவிளக்க
வானின்மலயமந்தமாருதமே—தேனிமிர்ப்பக்

கீச்சுக்கீச் சென்னுங்கிளிப்பிள்ளைகூண்டினிலே
பேச்சற்றுத் தூங்கும்பெரும்பொழுதில்—வீச்சரவிற்
கென்றும்பகைபாமிளமயிலின்வார்கழுத்தே
யொன்றுநிறக்கச்சொன்றுவந்தணிந்து—மன்றல்
விரிபசும்புல்போன்றதொருமேலாடைபோர்த்தி
வருவளிசேர்சாளரத்தைமன்னித்—தெருமுகமாய்ப்
போவார்வருவார்பொருந்தாநடுநிசியில்
ஆவியனையானையெண்ணியன்பகத்தில்—மேவுதலால்
தேடிநொந்தோயிங்கிவளேசிந்தைவைத்துநீவிரும்பி
நாடுமவளென்றுரைத்தேனன்.

"மாலைப்பொழுதினிலே மணமனைக்குப்போம்போது" என்னும் முதனிலையுடையஒன்பதாஞ்செய்யுண்மொழிபெயர்ப்பு முன்னமே வெளி வந்தது.

பத்தாஞ்செய்யுண்மொழிபெயர்ப்பு வருமாறு:—

திருவனையாய் செயலொழித்துச் செவிசாயம்மா
செல்வரவர்வந்துநின்றசெய்திசொல்வேன்
உரிமையுடன்கதவச்சங்கிலியைமெல்லென்
ஓசையெழவசைத்தனரவ்வுண்மைதேராய்
பரிபுரஞ்செம்பாதத்திற்பதருவண்ணம்
பாவையேவெளிவருவாயவரைக்காண்போம்
திருவனையாய்செயலொழித்துச்செவிசாயம்மா
செல்வரவர்வந்துநின்றசெய்திசொல்வேன்.

மணமகளேகுலமணியேமாலைக்கால
வளியோவென்றெண்ணிநீமயங்கவேண்டாம்
அணிமதியம்மணிமுன்றிலிருளைநீக்கி
யணைகின்றவிளவேனிலழகிதம்மா
இணைவிழியைப்பூந்துகிலான்மறைத்துக்கொள்வாய்
எழிற்கரத்திற்சிறுவிளக்கொன்றெடுத்துக்கொள்வாய்
மணமகளேகுலமணியேமாலைக்கால
வளியோவென்றெண்ணிநீமயங்கவேண்டாம்.

நாணுற்றுலவரொடுநீமொழியாடாதே
　　நாடியொருபுறமாகநண்ணுநங்காய்
பேணித்தாவைநுரைக்கும்வார்த்தைகேட்டுப்
　　பேசாதுநிலநோக்கிச்சார்வாயம்மா
ஆணிப்பொன்பதித்தவளையாற்றுவண்ணம்
　　அணிவிளக்கங்கரத்தேந்திபழைத்துள்வாராய்
நாணுற்றுலவரொடுநீமொழியாடாதே
　　நாடியொருபுறமாகநண்ணுநங்காய்.

வேலையின்னுமொழிந்ததின்றேமின்னேபொன்னே
　　விருந்தினரெம்முயிரனையார்மேவிநின்றார்
சாலைவிளக்கேற்றிவைப்பாய்மாலைக்காலச்
　　சடங்கிற்குவேண்டுவனதருவாயம்மா
சீலமிகுபூங்குழலைவகிர்ந்துவாசச்
　　சிந்தூரத்தால்வரிதீட்டிச்செவ்விசேர்ப்பாய்
வேலையின்னுமொழிந்ததின்றேமின்னேபொன்னே
　　விருந்தினரெம்முயிரனையார்மேவிநின்றார்.

இரவுக்குறியறிந்த தோழி தலைமகளைக் குறியிடத் துய்த்தற்கு விரையும் பொருண்மையது மேலைச்செய்யுள். வரையும் நாள் அணு கினமையாலே தலைமகளை மணமகளென்றது பொருத்தமாயிற்று.

ஸ்ரீராமகிருஷ்ணமடம்,
திருமயிலை, சென்னை.

பிரபோதசைதந்யர்.

உ

1923-ம் ஹு டிசம்பர்மீ 25உ (ருதிரோற்காரிஹு மார்கழிமீ 10உ) காலை 9 மணிக்குக் கூடிய மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் விவரம்.

———(●)———

1. மகா-ா-ா-ஸ்ரீ K. ராமையங்காரவர்கள் B.A., B.L., M. L. A. அக்கிராசனம் வகித்தவர்.

2. ,, V. S. ராமஸ்வாமி சாஸ்திரியவர்கள் B.A., B.L.,

3. ,, M. கோபாலகிருஷ்ணையரவர்கள்.

4. ,, M. மாணிக்கவாசகம்பிள்ளையவர்கள் B.A., B.L.,

5. ,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L., இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

1. 1923-ஹு எப்ரல்மீ முதல் நவம்பர்மீ முடிய உள்ள சங்கம் வரவு செலவு கணக்குகளை அங்கீகரிக்கலாயிற்று.

2. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக் கோரிய அடியிற்குறித்துள்ளவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

(i) மகா-ா-ா-ஸ்ரீ A. M. சோமாஸ்கந்தபிள்ளையவர்கள், தலைமைத் தமிழ்ப்பண்டிதர், இந்துகாலேஜ், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(ii) ,, R. திருமலைஜக்கையா அவர்கள், மானேஜர் & உபாத்தியாயர், ஜக்கதேவி கருணை விலாஸவித்யாசாலை, கோம்பை.

3. 1922–23-ம் ஹுத்திய சங்கத்தின் வருஷாந்தக்கணக்குகளை அங்கீகரிக்கலாயிற்று.

4. சங்கவருஷோத்ஸவத்தை நடத்த மாட்சிமைதங்கிய கனம் அக்கிராசனாதிபதியவர்கள் சமீபமாயும் சௌகரியமாயுமுள்ள தேதி குறிப்பிடவேணுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

5. கோயம்புத்தூர் வக்கீல் மகா-ள-ள-ஸ்ரீ. ப. வெங்கடாசலமுதலியாரவர்கள், தர்மகைங்கர்யங்களின்பொருட்டு 28–5–1923உ எழுதிவைத்த டிரஸ்ட்பத்திரத்தில், இம்மதுரைத்தமிழ்ச்சங்கப்பரீக்ஷைகளிற் பரிசுபெறும் மாணவர்க்குப் பரிசளிப்பதற்காக வருடந்தோறும் ரூ 25 சங்கத்துக்கு உதவிவரவேண்டியதாகக்கண்டு, அவ்விதம் சங்கத்துக்கு உதவிபுருவதற்கு இச்சங்கத்தார் நன்றிபாராட்டி ரிக்கார்டில் பதிவு செய்தார்கள். இதனை ஷெயாருக்குத் தெரிவிக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

6. மகா-ள-ள-ஸ்ரீ வித்வான் மு. இராகவையங்காரவர்கள்தொகுத்த ‘பெருந்தொகை’ என்னும் நூலைச் சங்கத்திற் செந்தமிழ்ப்பிரசுரமாக அச்சிடுவது சம்பந்தமாகக் காரியதரிசியவர்கள் எழுதிய ரிப்போர்ட்டு அங்கீகரிக்கலாயிற்று.

7. பாரதம் முதலிய சங்கப்பிரசுரங்கள் மறுபதிப்பு ஆகிற விஷயம் அங்கீகரிக்கலாயிற்று. பாரதத்துக்குக் காகிதம் வாங்க ரூ 550 அனுமதி செய்யலாயிற்று.

8. சங்கக்கட்டடரிப்பேர்சம்பந்தமான ஒழுங்குகளைப்பற்றிய விஷயம் தள்ளிவைக்கலாயிற்று.

9. சங்கத்தின் அங்கத்தினர்களுக்குச் சங்கப்பிரசுரங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருபிரதிமட்டும் முக்கால்விலைக்குக் கொடுக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

10. சங்கம் அச்சாபீஸ், பைண்டிங் ஆபீஸ்களுக்கு அதிகாரி (Superintendent) ஒருவரை நியமுகம் செய்யவேண்டிய அவசியத்தைப் பற்றியவிஷயம் தள்ளிவைக்கலாயிற்று.

மதுரை,
25–12–1923.

K. ராமையங்கார்,
அக்கிராசனம்வகித்தவர்.

உ

இந்துதேச சரித்ர காலக்குறிப்புகள்.

(Chronological Notes of Indian History.)

(செந்தமிழ் கஎ-ஆம் தொகுதியின் உ௱ரு-ஆம் பக்கத்தொடர்ச்சி)

1803 ஒரிஸா மாகாணம் ஆங்கிலர் ஆட்சிக்குட்பட்டது.

1803 (கலி 4905 —சகம் 1726 ருதிரோத்காரி௵ தைமீ") தேப்பெருமாள் குமாரரான கருணைகரர் வேதபுரித் தல புராணமிபற்றி அரங்கேற்றினர். (ஷெ புராண கடைசிப் பாட்டைப் பார்க்க). வேதபுரி, திருவோத்தூர், திருவொற்றியூர் என்பன ஒருதலத்தைக் குறிக்கும். இது, வட ஆற்காடுஜில்லாவி லுள்ளது. [Vide Govt. Catalogue of Tamil Manuscripts Vol. II. 640-ம் பக்கம்].

1824—26 முதல் பர்மாயுத்தம்.

1824 தயானந்த ஸரஸ்வதி (மூலசங்கரர்) ஜனனம். கத்தியவார் மகாணம், மோர்விராஜ்யத்தில், அந்தணர்குலத்துதித்தவர். ஷெ ராஜ்ய டங்கார நகர் ஜமேதார். ஷெயார் பிதா—அம்பாசங்கரர். 1875-ல் ஆரிய ஸமாஜத்தை ஸ்தாபனஞ் செய்தார். 1883 அக்டோபர் 30-ல் இறந்தார்.

1825 செப்டம்பர் 4. தாதாபாய் நௌரோஜி ஜனனம். இவர் ராஜநீதியிலும், தேசபக்தியிலும் சிறந்தவர். காங்கிரஸ் மஹாஸபை ஸ்தாபகரில் முக்கியஸ்தர். காங்கிரஸ் சபாநாயகராய் விளங்கியவர். இவர் இயற்றிய நூல் Poverty and Un-British Rule in India (இந்தியாவின் எளிமையும்—ஆங்கில—ஆட்சிக்குறைகளும்) என்பது.

1828 ப்ராம்மஸமாஜ ஸ்தாபனம்.

1828 ஆகஸ்ட் 20—ராமமோஹன்ராய் கல்கத்தாவில் ப்ராம்ம ஸமாஜம் என்ற ஓர் ஆஸ்திகமதஸ்தாபனம் செய்தார். அவருடைய நண்பர் த்வாரகாநாத டாகூர் என்ற இளவாசர் (Prince) அவருக்கு வேண்டிய பொருளுதவி செய்தார். ஷையார் குமாரர் தேவேந்த்ரநாத் டாகூரும் ப்ராம்ம ஸமாஜத்தைச் சேர்ந்தார். 1857-ம் வருஷச் சிப்பாய்க்கலகத்துக்குப்பிறகு கேசவசந்த்ரஸேனனும் இம்மதத்தைத் தழுவினர்.

1829 ஸதி (=ஸஹகமனம்=உடன்கட்டையேறல்) என்ற அநுஷ்டானம் ராஜாங்கத்தாரால் தடைப்பட்டது.

1831 ஆகஸ்ட் 12. ப்ளாவட்ஸ்கி அம்மாள் ஜனனம். இவள் ப்ரம்மஞான (தியாஸாபிகல்) ஸமாஜத்தை ஸ்தாபித்தவள். 8-5-1891-ல் இறந்தாள்.

1833 ராம் மோஹன் ராய் சீமைக்குப்போனபோது, ப்ரிஸ்டல் நகரில் இறந்தார்.

1834 பிப்ரவரி 20. ராமக்ருஷ்ண பரமஹம்ஸர் ஜனனம். பிறப்பிடம்:—ஹூக்ளி ஜில்லாவில் கமர்புகூர்க்ராமம். இவர் பூர்வாச்ரமப்பெயர்— கங்காதர சத்ரஜி. அந்தணர். 1886-ல் மாணம்.

1838 முதலாவது ஆப்கன் யுத்தம். ஆங்கிலர் வெற்றி.

1842-10-1 ஸர். எஸ். சுப்ரமண்ய ஐயர் ஜனனம். இவர், சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ். ராஜநீதியிலும், தேசபக்தியிலும் சிறந்தவர். மதுரை—பிறப்பிடம். அந்தணர்.

1843 அடிமை வியாபாரம் சட்டவிரோதமாக்கப்பட்டது.

1850 ஸர். டி. மாதவ ராவ் (தஞ்சையில்) ஜனனம்.

1852 இரண்டாம் பர்மாயுத்தம்.

1853 இந்தியாவில் முதல்முதல் ரெயில்வே போடப்பட்டது.

1855 அக்டோபர் 29-ல் தஞ்சையையாண்ட கடைசிமன்னனான ஸரபோஜிமஹாராஜா மரணமானார். இதனுடன் மஹாராஷ்ட்ர ராஜவம்சம் அற்றுப்போயிற்று. இது முதல் இவ்வரசு ஆங்கிலர் ஆட்சிக்குள்ளாயிற்று.

1856 ஈச்வர சந்த்ர வித்யாஸாகரர் செய்தபெருமுயற்சியால் ஹிந்து விதவாவிவாஹச்சட்டம் நிரூபணமாயிற்று.

1857 சிப்பாய்க் கலகம் நடந்தது.

1857 தஞ்சை ராஜ்யம் ஆங்கிலர் ஆட்சியில் சேர்க்கப்பட்டது.

1858-ல் விக்டோரியா மஹாராணியார் ராஜசாஸனம் அளித்தார்.

1862 ஜனவரி 9உ ஸ்வாமி விவேகாநந்தர் (நரேந்த்ர நாத தத்தர்) ஜனனம். இவர் கல்கத்தா நகரில், பங்காளி காயஸ்தர் குலத்துதித்தவர். 4-7-1902-ல் மரணமானார்.

1865-ல் ப்ரும்மஸமாஜம் { (1) ஆதிஸமாஜம். (2) வேதஸமாஜம்.

என இருபிரிவாயிற்று.

(1) ஆதிஸமாஜஸ்தாபகர்—தேவேந்த்ரநாத டாகூர்

(2) வேதஸமாஜஸ்தாபகர்—கேசவசந்த்ரஸேனர்.

1866-ல் கோபாலகிருஷ்ணகோகலே ஜனனமானார். இவர் கோல்ஹாபூரில் மஹாராஷ்ட்ர அந்தணர்குலத்துதித்தவர். ராஜநீதியிலும் தேசபக்தியிலும் சிறந்தவர். காங்கிரஸ் மஹாசபையைத் தலைவராயிருந்து நடத்தினவர். ஓர் சபாநாயகராகவும் விளங்கினவர். பல ஆண்டுகள், இந்தியசட்ட மஹாசபை அங்கத்தினராயிருந்து, நமது தேசக்ஷேமத்துக்கு, இங்கும், சீமையிலும் தென்னாப்ரிகாவிலும் உழைத்தவர், 1915-ல் மரணமானார்.

1875-ல் ப்ரும்மக்ஞான ஸமாஜ (தியாஸாபிகல் ஸொஸைடி) ஸ்தாபனம். நியூ யார்க் நகரில், ப்ளாவட்ஸ்கி என்ற ருஷியாதேச ஸ்த்ரீயால் ஸ்தாபிக்கப்பட்டது.

1876—78 தாதுவர்ஷப்பஞ்சம். தென் இந்தியாவில் 74000 சதுரமைல் பரப்பில் 160 லக்ஷம் ஜனங்கள் வருந்தினார்கள். தினந்தோறும் ஏழரை லட்சம் ஜனங்கள் ஸர்க்கார் ஆதரவுபெற்றார்கள். 22 மாதத்தில் ஸர்க்கார்ச் செலவு 12 கோடி. இக் கொடும்பஞ்சத்தில் மாண்டவர் 10 லட்சம் பேர்.

1877-ல் மத்வஸித்தாந்த ஓந்நோஹினி ஸபா (கஞ்சி சுப்பராவால்) ஸ்தாபனம்.

1878-ல் 2-ம் ஆப்கன் யுத்தம்.

1879—80-ல் 3-ம் ஆப்கன் யுத்தம்.

1879-ல் ப்ரும்மஞானசபையின் மூக்யஸ்தாபனம் இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டது.

1885-ல் காங்க்ரஸ்மஹாசபைஸ்தாபனம்[முதல்வருஷகாங்க்ரஸ்.]

1886-ல் 3-ம் பர்மா யுத்தம்.

1886 ஆகஸ்ட் 16. ராமகிருஷ்ணபரமஹம்ஸர் மரணம்.

1887-ல் தீபெத் தேசத்தில் லடாக் என்ற தலைநகரில் உள்ள பௌத்த ஆஸ்ரமத்தில், நிகோலஸ் நாட்ஸ்விட்ச் என்ற ருஷியர் ஒருவர், சுவடி ஒன்று கண்டுபிடித்தார். ஏசுகிரிஸ்து, தனக்கு ஞானஸ்நாநம் (பாப்டிஸம்) ஆகுமுன் 12 வருஷகாலம், இந்தியாவில் ஸஞ்சாரம் செய்ததாகவும், க்ஷமணர், பௌத்தர், ஹிந்துக்களிடம் உபதேசங்கள் பெற்றதாகவும் அச்சுவடியில் சொல்லப்பட்டிருக்கிறது.

1889-ல் க்ரிஸ்தவ வாலிபர் சங்கம் (யங்மென்ஸ் க்ரிஸ்தியன் அஸோஸியேஷன்) முதல் முதல் இந்தியாவில் ஸ்தாபனம்.

1892 ஆர்ய ஸமாஜம் இருகட்சியானது.

1893-ல் சிகாகோ நகரில், ஸர்வமதஸமாஜம் கூடியது. அதில் விவேகாநந்த ஸ்வாமிகள், ஹிந்துமதப் பெருமையைப் புகழ்ந்து ப்ரஸங்கித்தார்.

1895-ல் கும்பகோணம் அத்வைதஸபா ஸ்தாபனம். 1902 ஜுலை 4-ல் விவேகானந்த ஸ்வாமிகளின் மரணம்.

1902-ல் பாரத தர்ம மஹாமண்டலம் தர்பங்கா மஹாராஜா வால் ஸ்தாபனமாயிற்று.

1905-ல் ஸ்ரீமான் கோகலே அவர்களால் 'Servants of India Society' (தேச ஸேவ ஸபா) ஸ்தாபனமாயிற்று.

1907-ல் கலனல் ஆல்காட் மரணம்.

1907-ல் அமெரிக்காவில், லாஸ் ஏஞ்ஜலிஸ் நகரில், பிரேமானந்த (பாபு) பாரதியவர்களால், கிருஷ்ணாலய நிர்மாணம்.

1908 ஜுலை. B. M. மலபாரி அவர்களால், ஸேவாஸாதன ஸ்தாபனம்.

1911 மே (1) ஸ்ரீவைஷ்ணவர்கள், (2) வல்லபர்கள் (3) மாத்வர்கள், (4) நிம்பார்க்கர் என்ற நான்கு வைஷ்ணவ உபமதத்தவர்கள் அலஹாபாத்தில் பொதுச் சபை கூட்டினார்கள்.

1911 அக்டோபரில் விவேகானந்த சிஷ்யையான, ஸிஸ்டர் நிவேதிதை என்ற ஆங்கிலமாதின் மரணம்.

1914 ஆகஸ்ட் 4 ஜர்மன் மஹாயுத்தாரம்பம். 1561 நாள் நடந்தது.

ஆர். எஸ், நாராயணஸ்வாமி ஐயர், B. A. B. L.,

மதுரை.

ஸ்ரீ:

மதிப்புரை.

க. ப்ரும்மவித்யாசதுஸ்ஸூத்ரீ:—(தமிழுரையுடன்)—இது, மதுரா நகரவாசியான தேதியூர்சாஸ்த்ரரத்னம் ப்ரும்மஸ்ரீ சுப்பிரமணியசாஸ்திரிகளால் எழுதப்பட்டது. வேதாந்தசூத்திரங்களுக்கு ஸ்ரீமத் சங்கரபகவத்பாதரால் எழுதப்பட்டபாஷ்யார்த்தங்களைத் தழுவி ஸ்ரீசதாசிவப் பிரும்மேந்திரரால் எழுதப்பட்ட ப்ரும்மசூத்திரவிருத்தியை மனனம் பண்ணுமவர்க்கு மிகவும் உபகாரமாக பூர்வபக்ஷசித்தாந்தங்களெல்லாம் தெளிவாகவிளங்கும்படி நன்றாயெழுதப்பட்டிருக்கிறது. இவ்வாறே மற்றுமுள்ள சூத்திரங்களுக்கும் உரையெழுதிவெளியிட்டால் வேதாந்த விசாரம்செய்பவர்கட்கு மிகவும் பயன்படத்தக்கதாயிருக்கும். அவ்வாறு சாஸ்திரியாரவர்கள் முயர்சித்து முடிக்கும்படி இப்புத்தகத்தைப் பலரும் வாங்கிப் படித்து அவர்களுக்கு ஊக்கத்தையுண்டாக்கினால் அவர்களது அருமையானகல்வித்திறமையை உலகிற்கும் பயன்படச்செய்வதாகும். இதன் விலை ரூபா 2 வேண்டுவோர் ப்ரும்மஸ்ரீ தேதியூர் சுப்பிரமணிய சாஸ்திரிகள், கோபாலக்கொத்தன்தெரு, மதுரை என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

உ. தஞ்சைப் பெரியகோயிற் சரிதக்குறிப்புக்கள் :—இது, சிலா சாசனங்களை ஆதாரமாகக்கொண்டு தஞ்சைக் கல்யாணசுந்தரம்ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் எல். உலகநாதபிள்ளையவர்களால் எட்டுப் பக்கங்களுக்குள் எழுதப்பட்டதொரு சிறுபுத்தகமாயினும், இதனால் அறிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் பலவுள்ளன. இவ்வாறு சிலா சாசனங்களினின்று வெளிபாகத்தக்கவிஷயங்களைக் கவனித்தறிந்து சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதப்பட்ட புத்தகங்கள் ஒன்றுங் காணப்படவில்லை. இதனால் ராஜராஜேசுவரன்காலத்து நிகழ்ந்த ஒழுக்க வழக்கங்கள் பல தெளிவாய் விளங்குகின்றன.

ங. பெருந்தேவனார்பாரதம்:—இது, 1925-ம் வருஷ பரிக்ஷைக்குப் பயிலும் போதனாமுறைக்கழகம் பிரைமெரிவகுப்புமாணவர்களுக்குப் பாடமாக ஏற்படுத்திய கவிமணிமாலையிலுள்ள பெருந்தேவனார் பாரதப் பாக்களுக்குச் சேலம் காலேஜ் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் பண்டித எஸ். ஆர். திம்மப்பையரவர்களால் நன்றாயெழுதப்பட்ட பதவுரை, கருத்துரை, கதைகள், அணியமைதி முதலியவை அடங்கியது. இதன்விலை அணா ஆறு. வேண்டுவோர் உரியோர்க்கெழுதிப்பெறலாம்.

ச. திருவாசகம்போற்றித்திருவகவலிற்காணப்படும் 'மூவாநான் மறை' என்னும் சொற்றொடரின் பொருளாராய்ச்சி :—இது, திருசிரபுர வாசியான ஸ்ரீமான் திரு. மா. சாம்பசிவம்பிள்ளையவர்களெழுதிய

ஆராய்ச்சிகளுள் ஆறுவதாக எழுதப்பட்டது. இதில், திருவாசகவிரிவுரையாசிரியர், திருவாசகத்தில் 'மூவாநான்மறை முதல்வாபோற்றி' என்பதில் 'மூவாநான்மறை'யென்பதற்கு இருக்கு, எசுர், சாமம், அதர்வம் எனப் பொருள்கொள்வது பொருந்தாதென்றதை, அவர் அம்மறைகளாகக்கொண்ட தொல்காப்பியம், இறையனாகப்பொருள், திருக்குறள், தேவாரத்திருமுறைகள் என்னும் இவற்றினுள்ளும் பிறவற்றினுள்ளுமுள்ள பலபல பிரபலப்பிரமாணங்களால் நன்குமறுத்து, அவை ருக்கு, யஜுஸ், சாமம், அதர்வணமென்று நிரூபித்திருக்கிறார்கள். இவ்வாறான ஆராய்ச்சியே இக்காலத்திற் சைவத்தமிழ்மக்களை மயங்கவிடாமல் உண்மையறிவூட்டி வாழ்விக்கவல்லது. இதற்கு ஒரு மதிப்புரையும் ஸ்ரீமத் சுவாமிநாதபண்டிதரவர்களால் நன்றாயெழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா நான்கு.

ரு. மருத்துவசாஸ்திரம்:—இது, கல்லிடைக்குறிச்சி ஸ்ரீமான். எம். ராதாகிருஷ்ணன் (எல் எம்.பி., எம்.ஆர்.எ.எஸ்.,) அவர்களால் ஆங்கில மருத்துவநூன்முறைகளை மருத்துவச்சிகளும் தமிழ்மக்களும் தமிழிற்படித்தறிந்துகொள்ளும்படி எழுதப்பட்ட ஒரு அருமையான புதியபுத்தகம். இதில், கருப்போற்பத்திக்குரிய உறுப்புக்களிலிருக்கவேண்டிய இலக்கணமுதலாக ஆரோக்கியமுள்ள குழந்தையைப் பெறுமளவாக இடையில் நிகழும் பலவித நிகழ்ச்சிகளும் பரீக்ஷைகளும் தெரியுமாறு 27 அத்தியாயமாகப் பகுத்து எழுதப்பட்டுள்ளன. ஆங்காங்கு வேண்டுமிடங்களில் விளக்குதற்குரிய படங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் சங்கேதப்பெயர்கள் தமிழ்மொழியாயும் வடமொழியாயும் வைத்தெழுதப்பட்டன. ஆயினும், அவற்றைத் தெளிவாய்த் தெரிந்துகொள்ளும்படி இடையிடையே ஆங்கில எழுத்தாலும் அவை காட்டப்பட்டுள்ளன. இவ்வாறு இவர்கள் ஆங்கில வைத்திய நூல்களில் அவசியமானவற்றைத் தனித்தனி தமிழிலெழுதிவருவார்களாயின், மிகவும் பயன்படத்தக்கனவாம். இதன் விலை ரூபா 2-8-0. வேண்டுவோர் உரியோர்க்கெழுதிப் பெறலாம்.

சு. ராஜபுத்திர விஜயம்:—இது, ஆங்கிலத்திற் பேர்பெற்ற பண்டிதர்களால் எழுதப்பெற்ற பல சரித்திரப் புத்தகங்களைத் துணையாகக் கொண்டு ஸ்ரீமான். எம். எஸ். சுப்பிரமணிய ஐயரவர்களால் எழுதப்பட்டது. இதில், கனகசேனன், சீலாதித்தன், குகாதித்தன், நாகாதித்தன், பூபசிம்மன், கோமனன், ராணி கூர்மதேவி, இரகூபன, ராணாலக்ஷ்மணன், ராணா அமரசிம்மன், ராணா செயிதசிம்மன், ராணாலக்ஷசிம்மன் ராணா மோகலன், மகாராணா கும்பன், உதசிம்மன், ராணா ரவிமல்லன், ராணா சங்கரசிம்மன், ராணா ரத்தினசிம்மன், ராணா விக்கிரமஜித்தன், ராணா உதயசிம்மன், சமரசிம்மன் எனுமவர்களுடைய சரித்திரங்கள், அழிந்தமட்டில் 220 பக்கங்களில், படிப்பதற்கினிமையான தெளிவான

தமிழ்நடையில் நன்றாய் எழுதப்பட்டிருக்கின்றன. இதைப்படிக்கும் மாணவர்களுக்கு அவரறியவேண்டிய பல உலகநீதிகளும் ஒழுக்கவழக்கங்களும் நன்கு புலப்படுத்துவதோடு முன்னுணர்வு, தற்காப்பு, முயற்சி, நல்லறிவு, தேசபக்தி முதலிய பலகுணங்களையும் உண்டாக்கத்தக்கது. தமிழ்நடையில் இனிமையாயும் தெளிவாயும் எழுதுதற்கும் பேசுதற்கும் போதிய ஆற்றலுண்டாக்கவல்லது. இதன் விலை ரூபா 1—4—0. தபாற்கூலி வேறு. வேண்டுவோர் மயில்வாகன் கம்பெனி, 32, ஐயப்பசெட்டிவீதி, மண்ணடி, மதராஸ் என்ற விலாசத்துக்கெழுதிப் பெறலாம்.

எ. உபந்யாச மஞ்ஜரீ:—இது, மதுரைக் காலேஜ் ஸம்ஸ்க்ருத பண்டிதர் ஸ்ரீமத். கோ. வை. சுப்பிரமணிய சாஸ்திரிகளால் எழுதப்பட்டது. இதில், 1. மதுரை, 2 திருஞானசம்பந்தர், 3. நீலகண்ட தீக்ஷிதர், 4. சங்கரபகவத்பாதாள், 5. பக்தி என்னும் இவற்றைப்பற்றி, ஸ்ரீ காஞ்சி காமகோடிபீடாதிபதிகளான ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் மதுரையில் எழுந்தருளியிருந்தபோது அவர்களால் ஒவ்வொருதினமும் உபந்யசிக்கப்பட்ட விஷயங்கள் அடங்கியுள்ளன. இதனால் அறியத்தகும் அருமையான விஷயங்கள் பல உள்ளன. ஸ்வாமிகளின் உபந்யாஸங்களையெல்லாம் இன்னும் தொடர்ந்துவெளியிடும்படி இப்புஸ்தகத்தை ஆஸ்திகபுத்தியுள்ளோரெல்லோரும் வாங்கிப்படித்து, சாஸ்திரிகளுக்கு ஊக்கத்தை உண்டாக்குவாராக. இதன்விலை அணா நான்கு. வேண்டுவோர் மதுரைக் காலேஜ் ஸம்ஸ்க்ருத பண்டிதர் ஸ்ரீமத். கோ. வை. சுப்பிரமணியசாஸ்திரிகளுக்கு எழுதிப்பெறலாம்.

அ. செந்தமிழ்ச்செல்வி:—இதன் இரண்டாவது சிலம்பின் முதலாவது பரல் வெளிவந்திருக்கிறது. இதில், சைவசித்தாந்த வரலாறு, தமிழ்ப்புலவர் வரலாறு, அகத்தியர், மொழிகள்வெளியிடுமுண்மை, வான்மீகரும் கம்பரும், காழித்தேவாரச்சிறப்பு, தமிழர்தம்உயிர்க்குறுதி, ஞானப்பூங்காவனம், மணிவாசகனும் ஆழ்வார்களிற்சிலரும் என்பனவை முதலிய ஆராய்ச்சிகள் செவ்வியதமிழ்நடையில் வெளியிடப்பட்டுள்ளன. இப்பத்திரிகையின் ஆட்டைக்கையொப்பம் ரூபா மூன்று. வேண்டுவோர் சைவசித்தாந்தநூற்பதிப்புக்கழகம், 306, லிங்கசெட்டிதெரு, சென்னை, என்ற விலாசத்துக்கெழுதிப் பெறலாம்.

கூ. நவரஸமஞ்ஜரி:—இது, ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இதன் முதலாவது புத்தகத்தின் முதலாவது இலக்கம் வெளிவந்திருக்கிறது. இதில் தெய்வபக்தி, ஞானம், கல்வி, பொதுவிஷயங்கள் முதலியன வெளிவருமெனக் கண்டிருக்கிறது. இம் முதற்பகுதியில் இப்பத்திரிகையின் சிறப்புப்பாயிரமும், பத்திராதிபர் முகவுரையும், வில்லிபுத்தூரர் பாரதம் முதல் 33 பாட்டுக்களுக்குப் பதவுரை, விசேடவுரை, இலக்கணக்குறிப்புக்களும், பிறவும் வெளிவந்துள்ளன. இதன் வருடச்சந்தா ரூபா 5—8—0. தபாற்கூலி வேறு வேண்டுவோர் இதன் ஆசிரியரான வ. எம் பேருரான்செட்டியாரவர்களிடம் (511. தங்கசாலைவீதி, பார்க்குடவுன் போஸ்டு, சென்னை) பெறலாம்.

கo திருக்குறள்விளக்கம்:—இது, கிருஷ்ணாம்பேட்டைத் திருவாளர் குப்புசாமிமுதலியாரவர்களால், திருக்குறளுக்குப் பரிமேலழகருரையையடுத்து விரிவுரையொன்றெழுதப்பட்டு ஸ்ரீமான் கா. ரா. காளத்தீசுரமுதலியாரவர்களாற் பதித்து மாதச்சஞ்சிகையாகவெளியிடப்பட்டுவருகிறது. திருக்குறள் படிப்பவர்களுக்கும் பிரசங்கம்செய்பவர்களுக்கும் பயன்படத்தக்கது. இதன் தனிப்பிரதி அணா நான்கு. தபாற்கூலி வேறு. ஆறுமாதச்சந்தா ரூ. 2. வருடசந்தா ரூ. 4. வேண்டுவோர் கா. ரா. காளத்தீசுரமுதலியாரவர்கள், 13. கிருஷ்ணப்பமேஸ்திரிவீதி, பார்க்குடவுன் போஸ்டு, சென்னை என்ற விலாசத்திற்கு எழுதிப்பெறலாம்.

கக. ஆரோக்கியதீபிகை :—இது, ஆரோக்கியமார்க்கங்களைப் போதிக்கும் விஷயங்களடங்கியதாக சென்னை மெடிகல் கௌன்ஸில் மெம்பர் டாக்டர் ஸ்ரீமான் யூ. ராமராவ் எம். எல். ஸி. அவர்களால் தமிழ்நடையில் எழுதி வெளியிடப்படும் மாதாந்தத்தமிழ்ப்பத்திரிகை. இதன் முதலாவது பகுதி நமக்குக் கிடைத்தது. அதில் "நோயற்ற வாழ்வே குறைபற்றசெல்வம்" என்பது முதலான சுகவாழ்வுக்குரிய இருபது விஷயங்கள் நன்றாயெழுதப்பட்டிருக்கின்றன. இதன்வருடச்சந்தா ரூபா 1—8—0 தனிப்பிரதிவிலை அணா இரண்டு. வேண்டுவோர், ஆரோக்கியதீபிகை ஆபீஸ், 323 தம்புசெட்டிதெரு, ஜி. டி. சென்னை, என்ற விலாசத்திற் பெறலாம்.